Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 32 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.ஆகிர் 28 (16.08.2004) திங்கட்கிழமை இதழ்:318

புதுப்பொலிவுடன் யாழ்ப்பாணத்தில்
FedEx. Express
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும்
விரைவாக பொதிகள், கடிதங்களை
அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்
THIRUMURUGAN COM NET
Opposite Diolag phone shop
259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
Fax:021 222 7836 E.mail:thirumurugan5@lycosmail.com
பலநோக்கு கூ.ச. முன்பாக
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 7560
Fax:021 222 7310

## ஐரோப்பிய நாடுகளின் தூதர்கள் கிளிநொச்சிக்கு இன்று விஜயம்!

(கொழும்பு)

தேக்கமடைந்த நிலையிலுள்ள அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடல் நடத்துவதற்காக ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்கள் இன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளின் தூதுவர்களே கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

ஏ-9 வீதியூடாக கிளிநொச்சி வரும் இவர்கள், பகல் 11 மணிக்கு தமிழீழ அரசியற்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் ஆயுதக் கொள்வனவுக்கு 3400 கோடி ஒதுக்கியுள்ளனராம்!

### சிங்களப் பத்திரிகை கூறுகிறது

விடுதலைப் புலிகள் ஆயுதக் கொள்வனவுக்காக 3400 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளதாக இராணுவப் புலனாய்வுத்துறையின் தகவலை ஆதாரம்காட்டி சிங்கள நாளிதழான 'திவயின' நேற்று செய்தி வெளியிட்டிருந்தது. அரசின் ஆயுதக் கொள்வனவுக்கான நிதி ஒதுக்கீட்டைவிடவும் இது அதிகமென அந்தப் பத்திரிகை தனது செய்தியில் குறிப்பிட்டிருந்தது.

அமெரிக்க இராணுவ அதிகாரிகள் இலங்கை இராணுவத்தினருக்கு உதவியளிப்பதை தாம் விரும்பவில்லை என்பதை தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவத்தினருக்கு உணர்த்தியுள்ளதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(01)

## வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு உதவுவதற்கு இந்தியா தயாராம்!

### இந்தியத் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு இந்திய அரசாங்கம் உதவத் தயாராக இருப்பதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபம் சென் தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள இந்தியத் தூதுவரின் இல்லத்தில் நடைபெற்ற இந்தியாவின் 57ஆவது சுதந்திர தின நிகழ்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

# 'நாட்டின் பொருளாதாரம் மோசமடைந்து செல்கின்றது'

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உலகவங்கி எச்சரிக்கைக் கடிதம்!

(கொழும்பு)

**இலங்கையின் பொருளாதார நிலைமை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எச்சரிக்கைக் கடிதங்களை உலகவங்கி அனுப்பியுள்ளது.**

**இவ்வாறு உலகவங்கி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நாட்டின் பொருளாதாரம் குறித்து எச்சரிக்கைக் கடிதங்களை அனுப்பியுள்ளமை இதுவே முதற்தடவையாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.**

அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர்களின் தெளிவுக்காக இந்த எச்சரிக்கைக் கடிதத்துடன் புத்தகம் ஒன்றும் அனுப்பப்பட்டுள்ளது.

இலங்கையின் சமாதான முயற்சியின் தற்போதைய நிலை, இலங்கையின் பொருளாதார நிலை அதனை மேம்படுத்த உலக வங்கி மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்பன இதில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி அர

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான நடவடிக்கைகளுக்கு கத்தோலிக்க ஆயர்கள் ஆதரவு!

### தமிழ்ச்செல்வனை சந்தித்து பேசியபோது தெரிவிப்பு



(கிளிநொச்சி)

அதிமேற்றிராணியார் வண. மல்கம் ரஞ்சித், யாழ். ஆயர் வண.தோமஸ் சவுந்தரநாயகம், மன்னார் ஆயர் வண.இராயப்பு ஜோசெப் ஆகியோர் அடங்கிய குழு - தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கிளிநொச்சியில் நேற்று மாலை சந்தித்து கலந்துரையாடியது.

இந்தச் சந்திப்பு நேற்றுமாலை 3 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் சமாதான முயற்சிகளுக்கு தமது முழுமையான ஆதரவைத் தெரிவிப்பதாகக் கூறிய ஆயர் குழுவினர், சமாதானப் பேச்சுக்கள் காலதாமதமடைவதற்கான காரணத்தை அரசியற்துறைப் பொறுப்பாளரிடம் கேட்டனர்.

இதற்குப் பதிலளித்த அரசியற்துறைப் பொறுப்பாளர் -

சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படுவதற்கான (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் முன்வைத்த திட்டப்படி அரசாங்கம் பேச்சு நடத்தாது!

### ஜே.வி.பியின் விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் புலிகளுடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படமாட்டாது.

அத்துடன், அந்த இடைக்காலத் தீர்வுத் திட்டம் குறித்த - ஜே.வி.பியின் நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை என்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அண்மையில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் ஜே.வி.பியின் சார்பான கால்நடை மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சர் அநுரகுமார திஸநாயக்க - விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக சபை அடிப்படையில் பேசுவதற்கு ஜே.வி.பி. தயாராக உள்ளதாகத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியற்துறைப் போராளிகள் திருமலையில் தடுத்துவைப்பு!

(திருகோணமலை)

திருகோணமலை - உவர்மலைப் பிரதேசத்தில் பொதுமக்கள் சந்திப்பிற்கெனச் சென்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் போராளிகள்- இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

கடந்த ஒரு வாரமாகத் திருகோணமலை மாவட்டத்தின் சகல பகுதிகளுக்கும் சென்று, பொதுமக்கள் சந்திப்புக்களை மேற்கொண்டுவரும் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் போராளிகள், கடந்த மூன்று தினங்களாக நகரத்தையும் நகரை அண்டிய பகுதிகளையும் சேர்ந்த பொதுமக்களை அவர்களது வீடுகளுக்கு நேரடியாகச் சென்று சந்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வட.கிழக்கு பட்டதாரிகளுக்கு பயிற்சிகள் தாமதமாகும்!

### பிரதி நிதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகளுக்குப் பயிற்சிகளை வழங்குவதற்குப் போதியளவு பயிற்றுவிப்பாளர்கள் இல்லாத காரணத்தால், இவர்களுக்கான பயிற்சிகளை வழங்கும் நடவடிக்கைகள் தாமதமடையும் எனப் பிரதி நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

பட்டதாரிகளுக்கான நியமனம் குறித்துக் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மடு பெருநாள் உற்சவத்தில் மூன்று லட்சம் பக்தர்கள்!

(மன்னார்)

மடு அன்னையின் வருடாந்தப் பெருவிழா நேற்று சிறப்பான முறையில் நடைபெற்றது. இந்தப் பெருவிழாவில் கலந்துகொள்வதற்காக இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் சிங்களவர், தமிழர் என 3 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் மடுவில் குவிந்திருந்தனர்.

கடந்த 13 ஆம் திகதியிலிருந்து அன்னையின் திருவிழாவுக்காக உயிலங்குளம் சோதனைச்சாவடி 24 மணிநேரமும் திறந்திருந்தது. யாழ்.குடாநாட்டிலிருந்தும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை விசேட போக்குவரத்துச் சேவையை நடத்தியது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில்

# பயிற்சி முடித்து வெளியேறியோருக்கு வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சியை நிறைவுசெய்துகொண்ட மாணவர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு வெளிநாட்டில் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தகைமையுடையவர்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை நடைபெறவுள்ள நேர்முகத் தேர்வுக்குத் தோற்றுமாறு யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபரும், பிராந்தியப் பணிப்பாளருமான என். யோகராஜன் தெரிவித்தார்.

நேர்முகத் தேர்வுக்கு வருவோர் கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களுடன், தொழிற்பயிற்சி சம்பந்தமான சான்றிதழையும் நேர்முகத்தேர்வாளர்களிடம் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

அமைச்சர் பியசேன கமகேயிடம் தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சி பெற்றவர்கள் வேலைவாய்ப்பின்றியிருப்பது தொடர்பாக யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் தெரிவித்ததையடுத்தே இந்த வேலைவாய்ப்புக்கான ஒழுங்கு மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் மேலும் தெரியவருகிறது.

இதேவேளை, வடக்கு - கிழக்கு அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்வதற்கான பணியிலும், தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சி பெற்றோர் உள்வாங்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. (ப)


நாகம்ஸ் சுன்னாகம்
இன்று முதல்
ஷியாம், திரிஷா, மாதவன், விவேக் நடித்த
லேசா லேசா
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பி.நே)
வெள்ளி முதல் அன்பு சகோதரன்

நிறஞ்சனாஸ் சங்கானை
அர்ஜுன், ரேவதி, நடித்த
சுபாஷ்
காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பி.நே)
ROAD TRIP
(சி-2723)

ராஜா யாழ்ப்பாணம்.


ரிக்கட் முற்பதிவு சிசர்துசிகொள்ளலாம்
காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே)
(சி-2725)


## சிறுவிளம்பரம்

### சேவை

ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல விண்ணப்பிக்கும் உங்களுக்கு, ஆவணங்கள் சரிபார்த்துக் கொடுக்கப்படும், விண்ணப்பப்படிவங்கள் பூர்த்தி செய்து கொடுக்கப்படும், ஆலோசனைகள் வழங்கப்படும், அத்துடன் உலகின் எந்தப் பாகத்துக்கும் குறைந்த விலையில் விமான ரிக்கட்டுகள், பொதிசேவைகள், தங்குமிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கவும். திருமதி ரேலங்கி செல்வராஜா,

No.344 காலி வீதி, கொழும்பு - 04. T.P-011 2504665.

### அவசர சந்திப்பு

தனியார் கல்வி நிலைய இயக்குநர்களுக்கான அவசர சந்திப்பு வைமன் வீதியிலுள்ள யாழ். நல்லூர் கோட்ட அரசியற்துறை கேட்போர் கூடத்தில் இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில், யாழ்.நல்லூர் கோட்டத்துக்கு உட்பட்ட அனைத்து கல்வி நிலைய இயக்குநர்களையும் தவறாது உரிய நேரத்துக்கு வரும்படி தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தின் செயலாளர் கேட்டுள்ளார்.

### இன்பர் சிட்டி விநாயகர் ஆலய மஹோற்சவம்

வியாபாரிமூலை இன்பர்சிட்டி சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தேர்த்திருவிழா 28 ஆம் திகதி சனிக்கிழமையும், தீர்த்தத் திருவிழா மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் சிறப்பாக நடைபெறவுள்ளது. (14)


தொழில் சார் அரங்கத் திட்டம்
Professional Theatre Project
அபிவிருத்திக்கான அரங்கு
Theatre for Development

செயல்திறன் அரங்க இயக்கம் சமுதாய அபிவிருத்திக்கான அரங்கச் செயற்திட்டங்களை கடந்த பல ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தி வருகிறது. தற்போது இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கான ஆளணி வளத்தை அதிகரிப்பதற்குப் புதிய பயிற்சிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

ஆரம்பிக்கப்படவுள்ள புதிய பயிற்சிநெறிகளின் விபரம்:

சிறுவர் அரங்கு Children Theatre
சமுதாய அரங்க Community Theatre

பயிற்சிக்காலம் ~ நான்கு மாதம்
பயிற்சி முடிவில் சிறப்பாக சித்தியடைவோர் எமது நிறுவனத்தில் வெற்றிடம் ஏற்படும் பட்சத்தில் மாதாந்தம் ரூ. 6000/- கொடுப்பனவில் நியமிக்கப்படுவர்.
பயிற்சிக் காலத்தில் போக்குவரத்துக்கான கொடுப்பனவு வழங்கப்படும்.

பயிற்சி நெறியில் பங்கு கொள்வோரிடமிருந்து வேண்டப்படும் தகுதிகள்

- G.C.E. A/L சித்தியடைந்திருத்தல்
- நாடகத்துறைசார் அனுபவம்/ஆர்வம்
- நாடகமும் அரங்கியலும் பாடத்தை G.C.E. A/L , வட இலங்கை சங்கீதசபை, பல்கலைக்கழக பரீட்சைகளில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் சிறப்புச் சித்தி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- வயதெல்லை 20 - 35 (ஆண், பெண் இருபாலாரும்)

பயிற்சியில் பங்கு பற்ற விரும்புவோர் உரிய ஆவணங்களோடு, 21-08-2004 (சனி) காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ள நேர்முகப்பரீட்சைக்கு வருகை தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தொடர்பு முகவரி: செயல்திறன் அரங்க இயக்கம்
Active Theatre Movement
"அருளகம்" ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(சி/2940)



யாழ்.வணிகர் கழகம் நடாத்தும்
மாபெரும் யாழ் வர்த்தகக் கண்காட்சி 2004
ஆகஸ்ட் 27 தொடக்கம் 29 வரை
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

தென்னிலங்கை உற்பத்தியாளர்களும், உள்ளூர் உற்பத்தியாளர்களும், இறக்குமதியாளர்களும் பங்குபற்றும் மாபெரும் வர்த்தகக் கண்காட்சி ஆகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை யாழ்.மத்தியகல்லூரியில் நடைபெறும். இக்கண்காட்சியில் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், வர்த்தகர்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள், சிறுகைத்தொழில் சார்ந்தவர்கள் மற்றும் ஆர்வம் உள்ளோர் அனைவரையும் இதில் பங்கு பற்றிப் பயன்பெறும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.
(சி-2937)



கிராமிய அபிவிருத்தி வங்கி
பணிநிலை வெற்றிடம்

கிராமிய அபிவிருத்தி வங்கியினால் கீழ் காட்டப்படும் பணிநிலைக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பணிநிலை I :- அலுவலர்
தகைமை :- க.பொ.த. உயர்தர பரீட்சையில் வர்த்தக பிரிவில் சகல பாடங்களிலும் திறமைச்சித்திக்கு குறையாத பெறுபேற்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பணிநிலை II :- எழுதுநர்
தகைமை :- க.பொ.த. சாதாரண தரத்தில் கணிதபாடத்தில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்தி அடைந்திருப்பதுடன், க.பொ.த. உயர்தரத்தில் வர்த்தகப்பிரிவில் 3 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.
அகவை :- விண்ணப்ப முடிவு திகதியில் 20 அகவைக்கு மேற்பட்டவராகவும், 35 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
மாதாந்த ஊதியம :- வங்கியின் ஊதியம் அளவுத்திட்டத்திற்கமைய வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் அருகில் உள்ள கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளைகளில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி 15.09.2004 இற்கு முன் கிராமிய அபிவிருத்தி வங்கி கிளைகளிலேயே ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். (சி/2805)

பொதுமேலாளர்
கிராமிய அபிவிருத்தி வங்கி
மத்திய செயலகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






திருகோணமலை சல்லிக் கிராமத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேசிய எழுச்சிப் பேரவைக் கூட்டத்தில் தேசிய எழுச்சிப் பேரவையின் பொறுப்பாளர் உமைநேசன் தேசியக்கொடி ஏற்றுவதையும், திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் உரையாற்றுவதை யும் காணலாம்.

(படங்கள் - சசிகுமார்)

# தேசியக்கொடி ஏற்றுவது தொடர்பாக உடன்பாட்டில் எதுவும் குறிப்பிடவில்லை

## திருமலை அரசியல் பொறுப்பாளர் தெரிவிப்பு

(திருகோணமலை)

தேசியக்கொடி ஏற்றுவது எமது வழமையான நடவடிக்கை. அரசாங்கக் கட்டடங்களில் நாங்கள் கொடி ஏற்றவில்லை. பொது இடத்திலேயே கொடி ஏற்றுகின்றோம். எங்கள் நிகழ்வின் ஆரம்பத்தில் கொடி ஏற்றுவது எமது வழமையான செயற்பாடு என திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.எழிலன் கடற்படையினருக்குத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் கூட்டத்தில் தேசியக் கொடி ஏற்றுவதால், அமைதிக்கு பங்கம் ஏற்படலாம். எனவே, தேசியக்கொடி ஏற்றுவதைத் தவிர்த்து கூட்டத்தை நடத்துமாறு கடற்படையினர் கேட்டதற்குப் பதிலளிக்கையிலேயே எழிலன் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் சல்லியில் நடைபெற்ற ஊரெழு தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கமம் நிகழ்வில் கலந்துகொள்ளச் சென்றபோது, சாம்பல்தீவு என்னுமிடத்தில் வழிமறித்த கடற்படையினரால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

கொடி ஏற்றாது எமது நடவடிக்கைகளை தொடங்க முடியாது இருப்பினும், இந்த விடயமாக நீங்கள் போர் நிறுத்த கண்காணிப்பாளர்களிடம் தெரிவியுங்கள் எனக் கூறி அரசியல் பொறுப்பாளர் தொடர்ந்து பயணித்தார்.

இலங்கை அரசாங்கத்துக்கும் எமக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்பாட்டில் தேசியக் கொடி ஏற்றுதல் சம்பந்தமாக எந்த விடயமும் குறிப்பிடப்படவில்லை. கடற்படையினர் புரிந்துணர்வு உடன்படிக்கையை முழுமையாகப் படிப்பார்களானால், இது சம்பந்தமாக எவ்வித சிக்கல்களும் தோன்றாது என சி.எழிலன் மேலும் தெரிவித்தார். (04)

# அரச குடியிருப்புக்களிலிருந்து உடனடியாக வெளியேறும்படி 9 முன்னாள் எம்.பிகளுக்கு உத்தரவு!

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்பது பேரை அரசாங்கத்துக்குச் சொந்தமான குடியிருப்புக்களிலிருந்து உடனடியாக வெளியேறும்படி நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

அரசாங்கத்துக்குச் சொந்தமான வாழ்விடங்களை நாடாளுமன்ற உறுப்புரிமை இழந்த பின்னரும், இவர்கள் பயன்படுத்தி வருவதற்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கின் அடிப்படையிலேயே இந்த நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

வீடமைப்பு அலுவல்கள் பொது நிர்வாக அமைச்சின் பணிப்பாளர் கருணாரட்ண இந்த வழக்கை நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தார்.

நாடாளுமன்ற உறுப்புரிமை இழந்த பின்னரும் அரசாங்கத்துக்குச் சொந்தமான இடங்களில் குடியிருக்கும் இவர்கள் ஒன்பது பேரும் உடனடியாக அந்த இடங்களை விட்டு வெளியேற வேண்டுமென நீதிமன்ற உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (01)

## அமெரிக்க தூதரகம் மீது கல் வீசியவருக்குப் பிணை

கொள்ளுப்பிட்டிப் பகுதியில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகத்தின் மீது கல்வீசி தாக்குதல் மேற்கொண்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட சந்தேக நபர் ஒருவரைப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது.

அங்கொடையைச் சேர்ந்த சந்திரசிறீ என்பவரே இவ்வாறு தாக்குதல் நடத்தியதாகத் தூதரகப் பாதுகாப்பு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு, பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இவரை நீதிமன்றில் பொலிஸார் ஆஜர் செய்தபோது, 1500 ரூபா பிணையிலும் 25 ஆயிரம் ரூபா சரீரப்பிணையிலும் செல்ல நீதிமன்றம் அனுமதியளித்தது. (01)

# அமைச்சர் ராஜித சேனாரத்ன மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும்!

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும், அவரது மகனுக்கும் அரச காணிகளை வழங்கியமை தொடர்பாக, ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் கோரியுள்ளார்.

தற்போது வெளிநாடு சென்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதும், இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் காணியமைச்சரான ராஜித சேனாரத்ன அரச நிலங்களை களவாடியுள்ளதாக சமீப காலமாக அரசாங்க தரப்பால் குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்ற போதிலும், ஐக்கிய தேசியக் கட்சிக்கோ அல்லது அமைச்சரவைக்கோ அறிவிக்காமல் ஜனாதிபதிக்கும், அவரது மகனுக்கும் காணிகளை வழங்கியுள்ள தனது சக கட்சிக்காரரான ராஜித சேனாரத்ன மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் மகேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# மகாபொல வர்த்தக கண்காட்சி 21ஆம் திகதி சம்மாந்துறையில்

(சம்மாந்துறை)

வடக்கு - கிழக்கின் தமிழ் பேசும் இடம்ஒன்றில் முதன் முதலாக 237ஆவது மகாபொல வர்த்தக கண்காட்சி நடைபெறவுள்ளது. இந்தக் கண்காட்சி எதிர்வரும் 21ஆம் திகதி சம்மாந்துறையில் ஆரம்பமாகவுள்ளது.

கிழக்கு உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் எம்.ஐ. அன்வரின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வில் இறுதி நாளான எதிர்வரும் 28ஆம் திகதி வர்த்தக வாணிப நுகர்வோர் துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே பிரதம அதிதியாக பங்கேற்கவுள்ளார்.

கண்காட்சிக்கு வரும் தூர இடத்தவர்களுக்கென விசேட பஸ் சேவைகளும் நடத்தப்படவுள்ளன.

கண்காட்சியை குறிப்பிட்ட ஏழு நாட்களும் பிற்பகல் 2 மணியில் இருந்து நள்ளிரவு 2 மணிவரை பார்க்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது. (01)

## பெற்றோலிய கூட்டுத்தாபன

# ஊழியர்களின் போராட்டம் நாளைவரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் மேற்கொண்டு வந்த வேலைநிறுத்தப் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் லால் காந்த நேற்றுமுன்தினம் மாலை பிரதி அமைச்சர்களான மகிபால ஹேரத் மற்றும் குமார வெல்கம ஆகியோர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தியதுடன், இந்தப் பேச்சுவார்த்தையின்போதே இந்த இணக்கம் காணப்பட்டது.

நாளை ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்துவதற்கான நேரத்தை ஒதுக்கித் தருமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு உறுதியளிக்கப்பட்டதையடுத்தே, இந்தப் வேலைநிறுத்தப் போராட்டம் நாளை வரை ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை, இந்தியாவின் பாரத் பெற்றோல் கூட்டுத்தாபனத்துடன் இரகசியமான ஒப்பந்தம் ஒன்றில் அரசாங்கம் கைச்சாத்திட்டதாகவும், இதையடுத்தே, இந்த வேலை நிறுத்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், இலங்கையிலுள்ள மேலும் 100 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இந்திய நிறுவனத்துக்கு கையளிக்கப்படுமென இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (01)

# தனியார் மினி பஸ்களின் கட்டணங்கள் உயரும்

(கொழும்பு)

எரிபொருட்களின் விலைகள் உயர்த்தப்பட்டுள்ளமையையடுத்து, தனியார் சிற்றூர்திகளின் கட்டணங்களை உயர்த்துவதற்கான ஏற்பாடுகளை தனியார் மினிபஸ் சங்கம் மேற்கொண்டு வருகிறது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் டீசலின் விலை லீற்றர் ஒன்று 4 ரூபாவாலும், பெற்றோலின் விலை லீற்றர் ஒன்று 3 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

மானியங்கள் விலக்கப்பட்டுள்ளமையால், அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் என நிதி அமைச்சர் அறிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க அரசாங்கம் எரிபொருட்களின் விலைகளை உயர்த்தியமை குறித்து, ஐக்கிய தேசிய கட்சி தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

அரசாங்கம் தாம் உறுதியளித்தப்படி எவ்வித செயற்பாடுகளையுமமேற்கொள்ளாமல் அதற்கு மாறாக நடந்துக்கொள்வதாக கட்சியின் பதில் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார். (01)

# சர்வதேச பயங்கரவாதம் தொடர்பாக 20ஆம் திகதி ஒஸ்லோவில் மாநாடு

சர்வதேச பயங்கரவாதமும், இலங்கையின் இனப்பிரச்சினையும் என்ற தொணிப் பொருளில் கொன்லெனட் என்ற அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாடு எதிர்வரும் 20ஆம் திகதி ஒஸ்லோவில் நடைபெறவுள்ளது.

காங்கிரஸ் நிலையத்தில் நடைபெறவுள்ள இந்த மாநாடு உலக பயங்கரவாதத்தை துவம்சம் செய்ய வேண்டுமானால், பயங்கரவாதத்துக்கு எதிராக செயற்பட வேண்டும் என்ற தலைப்புடன் ஆரம்பமாகவுள்ளதாக அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

நோர்வே இலங்கையில் மேற்கொள்ளும் சமாதானம், அந்த நாடு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி மற்றும் பாதுகாப்பை வழங்கி வருகின்றமை, நோர்வேயின் 25 வருட கால சமாதான முயற்சிகள்.

உலக தற்கொலை குண்டுத் தாக்குதல்கள், கனடாவிலுள்ள புலிகள் சர்வதேச புலிகளுடன் இணைந்து மேற்கொள்ளும் செயற்பாடுகள், பயங்கரவாதத்தை எதிர்ப்பதில் உலக நாடுகளின் சட்டங்களில் காணப்படும் குறைபாடுகள், போன்றவை தொடர்பாக இந்த மாநாட்டில் கருத்துரைகள் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் ஊடகவியலாளர் மஹிபால, அமெரிக்கரான பீற்றர் சார்ல்க, இலங்கையரான சாந்த ஹெந்நெந்தி, போன்றோர் தமது கருத்துக்களை வழங்கவுள்ளனர்.

விசேட அம்சமாக இலங்கையின் சமாதானத்தில் நோர்வேயின் பங்கு என்ற தலைப்பில் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிராஸ்கர் உரையாற்றவிருந்த போதும், அதற்குப் பதிலாக போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் முன்னாள் பேச்சாளர் லீஸா ஹோன்டா உரையாற்றவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (01)

## மஹோற்சவம்

வல்வெட்டித்துறை நெடியகாடு பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 20 ஆம் ததிகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 28 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (14)

# தொண்டு நிறுவன இணையத்தினூடகவே திட்ட அறிக்கைகள் அனுப்பவேண்டும்

## மாதாந்த கூட்டத்தில் தீர்மானம்


திருகோணமலை மாவட்டத்தில் செயற்படுவதற்கான எந்த தொண்டர் நிறுவனங்களும், நிதி நிறுவனங்களுக்கு திட்ட அறிக்கைகளை அனுப்புவதாயின், அவை தொண்டர் நிறுவனங்களின் இணையத்தின் ஊடாகவே அனுப்பப்படவேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் ஒரே திட்டத்தை ஒரே இடத்தில் இருவேறு நிறுவனங்கள் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இணையத்தின் அங்கீகாரமின்றி வரும் எந்தத் திட்டங்களுக்கும் நிதி வழங்க வேண்டாம் என சகல நிதி நிறுவனங்களுக்கும் இணையம் அறிவிக்க வேண்டும் என்ற தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட தொண்டர் நிறுவனங்களின் இணைத்தின் ஓகஸ்ட் மாதத்துக்கான முதலாவது கூட்டம் நேற்றுமுன்தினம் திருகோணமலை சமூகசேவை நிலையத்தில் தலைவர் து.தவசிலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இதன் போது, இந்தத் தீர்மானத்தை தலைவர் தெரிவித்தார். இந்த விடயம் சம்பந்தமாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபருக்கும் தெரிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (04)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 400 மீற்றர் நீச்சல் போட்டியில் அமெரிக்க வீரர் உலக சாதனை




(ஏதென்ஸ்)

ஒலிம்பிக் போட்டியில் ஆவலுடன் எதிர் பார்க்கப்பட்ட நீச்சல் போட்டி நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது.

இதில் ஆண்களுக்கான 400 மீற்றர் தனி நபர் மெட்லி பிரிவில் அமெரிக்க வீரர் மைச்




கல் ஹெல்ப்ஸ் புதிய உலக சாதனை படைத்தார்.

அவர் போட்டித் தூரத்தை 4 நிமிடம் 08.26 வினாடியில் கடந்தார். இதற்கு முன்பு அவர் 4 நிமிடம் 08.41 வினாடியில் கடந்ததே சாதனையாக இருந்தது.

மற்றொரு அமெரிக்க வீரர் எரிக் வெண்டி 4 நிமிடம் 11.81 வினாடியில் கடந்து வெள்ளிப் பதக்கத்தையும், ஹங்கேரி வீரர் லாசலோ 4 நிமிடம் 12.15 வினாடியில் கடந்து வெண்கலப் பதக்கமும் பெற்றனர்.

400 மீற்றர் பிரிஸ்டைல் நீச்சல் பிரிவில் அவுஸ்ரேலிய வீரர் இயன்தோர்ப் 3 நிமிடம் 43.10 வினாடியில் கடந்து தங்கப் பதக்கம் பெற்றார். சிட்னி ஒலிம்பிக்கிலும் இவர் பதக் கம் பெற்றார்.




4X100 மீ தொடர் நீச்சலில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய குழு

மற்றொரு அவுஸ்ரேலிய வீரர் ஹேக்கட் வெள்ளியும், அமெரிக்க வீரர் கெல்லர் வெண் கலமும் பெற்றனர்.

பெண்களுக்கான 400 மீற்றர் தனி நபர் மெட்லி பிரிவில் உக்ரைனுக்கு தங்கப் பதக் கம் கிடைத்தது. அந்த நாட்டைச் சேர்ந்த யானா கிளச்கோவா 4 நிமிடம் 34.83 வினாடியில் கடந்து முதல் இடத்தைப் பிடித்தார். அமெரிக்கா, ஆர்ஜென்ரீனா நாடுகளுக்கு முறையே வெள்ளி, வெண்கலம் கிடைத்தன.




10 மீ பிஸ்டல் சுடும் போட்டியில் தங்கம் வென்ற உக்ரேனிய வீராங்கனை

4X100 மீற்றர் பிரிஸ்டைல் தொடர் நீச்சலில் அவுஸ்ரேலியா தங்கப் பதக்கம் பெற்றது. அந்த அணி 3 நிமிடம் 35.94 வினாடியில் கடந்து முதல் இடத்தைப் பிடித்ததோடு புதிய உலக சாதனை படைத்தது.




அமெரிக்கா வெள்ளிப் பதக்கத்தையும், ஹொலண்ட் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றன. நீச்சல் போட்டிகளில் அமெரிக்கா, அவுஸ்ரேலியா இடையே கடும் போட்டி இருந்தது.

இதேவேளை, பெண்களுக்கான 48 கிலோ உடல் எடை பிரிவுக்கான பளு தூக்குதலில் துருக்கி வீராங்கனை நூர்சன் புதிய உலக சாதனை படைத்து தங்கப் பதக்கம் வென்றார். அனைத்துப் பிரிவிலும் ஸ்னாட்ச் பிரிவிலும் சாதனை படைத்தார்.

நூர்சன் மொத்தம் 210 கிலோ தூக்கினார். இதற்கு முன்பு சீன வீராங்கனை வாங் 207.5 கிலோ தூக்கியதே சாதனையாக இருந்தது. அவர் ஸ்னாட்ச் முறையில் 97.5 கிலோ தூக் கினார். இதற்கு முன்பு 95 கிலோ தூக்கியதே சாதனையாக இருந்தது.

இப்பிரிவில் சீன வீராங்கனை லீ 205 கிலோ தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், தாய்லாந்து வீராங்கனை ஆரி 200 கிலோ தூக்கி வெண்கலத்தையும் வென்றனர்.



நீச்சலில் வெற்றிபெற்ற சீன வீராங்கனைகள்




# இரண்டாவது தங்கமும் சீன வீரருக்கே கிடைத்தது!



(ஏதென்ஸ்)

ஏதென்ஸ் ஒலிம்பிக்கின் 2 ஆவது தங்கப் பதக்கமும் சீனாவுக்கே சென்றது.

போட்டியின் முதல் நாளான சனிக்கிழமை 10 மீற்றர் துப்பாக்கி சுடுதல் போட்டியில் சீன மாணவி டு லி முதற்தங்கத்தை வென்றார்.

அதைத் தொடர்ந்து ஆண்கள் 10 மீற்றர் பிஸ்டல் போட்டியிலும் சீனாவுக்கே தங்கப் பதக்கம் கிடைத்தது.

வாங் யூபு 690 புள்ளிகள் பெற்று தங்கம் வென்றார். 6 ஆவது தடவையாக ஒலிம்பிக்கில் பங்கேற்கும் 43 வயதாகும் யூபு 1992 ஒலிம்பிக்கிலும் தங்கம் வென்றார். 1996 மற்றும் 2000 ஆண்டில் வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

இப் பிரிவில் ரஷ்யாவின் மிக்கைல் நெஸ்துருவ் வெள்ளியும், ரஷ்யாவின் விளாதிமீர் இசகோவ் வெண்கலமும் வென்றனர்.




# ஜூடோ போட்டிகளில் ஜப்பானுக்கு இரு தங்கம்







(ஏதென்ஸ்)


ஏதென்ஸ் ஒலிம்பிக் ஜூடோ போட்டியின் 60 கிலோ உடல் எடைப் பிரிவில் ஜப்பான் வீரர் தாடாஹிரோ நோமுரா தங்கப்பதக்கம் வென்றார். அவர் தொடர்ந்து மூன்றாவது முறையாக ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

1996 (அட்லாண்டா), 2000 ஆண்டு (சிட்னி), போட்டிகளில் அவர் தங்கம் வென்றிருந்தார்.

பெண்கள் 48 கிலோ எடைப் பிரிவில் ஜப்பான் வீராங்கனை ரியோகோ தானி தங்கப் பதக்கம் வென்றார். இது அவருக்கு 2 ஆவது ஒலிம்பிக் பதக்கமாகும்.

## வரலாற்றில் முக்கியத்துவமான வெற்றி

# தென்னாபிரிக்க அணியை இலங்கை அணி தோற்கடிப்பு



(கொழும்பு)

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்ற இலங்கை அணி 1-0 என்ற அடிப்படையில் தொடரைக்கைப்பற்றியது.

நேற்றுமுன்தினம் மழை பெய்ததால் ஆட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனால் தென்னாபிரிக்க அணி தோல்வியிலிருந்து தப்பி விடுமோ என்றநிலை ஏற்பட்டபோதும், நேற்றைய ஆட்டத்தில் இலங்கை அணியின் பந்து வீச்சில் தென்னாபிரிக்க வீரர்கள் 179 ஓட்டங்களுக்குள் சுருண்டதால் 313 ஓட்டங்களால் இலங்கை அணி வெற்றிபெற்றது.


2 விக்கெட் இழப்புக்கு 21 என்ற நிலையில் இருந்த தென்னாபிரிக்க அணி நேற்று மதிய இடைவேளைக்குப் பின்னர் தனது சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது.

பௌச்சர் 51, பொலக் 3, போயே 16, என்ரினி 0, ஹேராவாட் 1 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர்.

டிப்பென்னர் 59 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தார்.

பந்து வீச்சில் சமிந்த வாஸ் 6 விக்கெட்டுக்களையும், மாலிங்க 3 விக்கெட்டுக்களையும், டில்ஷான் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தென்னாபிரிக்க அணி இரண்டாவது இனிங்ஸில் 179 ஓட்டங்களையே பெற்றதால் 313 ஓட்டங்களால் தோல்வியுற்றமை குறிப்பிடத்தக்கது.



# தொடக்க ஆட்டக்காரர்களில் இப்போதைக்கு மாற்றமில்லை

## கங்கூலி தெரிவிப்பு

ஒருநாள் போட்டிகளில் ஆரம்ப ஆட்டக்காரர்களை மாற்றும் எண்ணம் தற்போது இல்லை என இந்திய கிரிக்கெட் கப்டன் கங்கூலி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடந்து முடிந்த ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரில் ஷேவாக் ஜோடியின் ஆட்டம் குறிப்பிடும் படியாக இல்லை. குறிப்பாக, ஷேவாக் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றந்தந்தார்.

இந்திய அணி அடுத்ததாக ஹொலன்ட் முத்தரப்புத் தொடரில் பங்கேற்கவுள்ளது. வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்தத் தொடரில் பங்கேற்பதற்காக இந்திய அணி நாளை மும்பாயிலிருந்து புறப்படும்.

இந்தத் தொடரில் ஆரம்ப ஆட்டக்காரர்கள் மாற்றப்படுவார்களா என்ற கேள்விக்குப் பதிலளித்த கப்டன் கங்கூலி -

இதனை இப்போது முடிவுசெய்ய முடியாது. சச்சின் - ஷேவாக் ஜோடியே தொடர்ந்து ஆட்டத்தைத் தொடங்கும். இவர்கள் ஜொலிக்காத பட்சத்தில் மாற்றப்படுவார்கள்.

அணியின் நலனுக்காகத்தான் நான் நடுத்தர வரிசையில் ஆடிவருகிறேன். மீண்டும் தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கும் முடிவை நான் மட்டும் எடுத்துவிட முடியாது. பயிற்சியாளர், மூத்த வீரர்கள் கூடிப்பேசி எடுக்க வேண்டிய முடிவு. அதற்குக் கட்டுப்பட வேண்டியது எனது கடமை என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவ ஆலோசனை செயற்பாடுகளுக்கு ஆசிரியர்களைத் தெரிவுசெய்ய ஏற்பாடு!

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் மாணவ ஆலோசனைச் செயற்பாடுகளுக்கு இலங்கை ஆசிரிய சேவைகளைச் சேர்ந்தவர்களிடமிருந்து கல்வி அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

மாணவர்களுக்கான ஆலோசனைகளை வழங்கல் மற்றும் வழிகாட்டல் வேலைகளிலும் ஈடுபடுவதற்காகத் தெரிவுசெய்யப்படவுள்ள ஆசிரியர்கள் - 40 வயதிலும் குறைந்தவர்களாகவும், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டத்துடன், ஆலோசனை பற்றிய ஓராண்டு டிப்ளோமா முடித்தவர்கள் அல்லது, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் உளவியல் சிறப்புப் பட்டத்துடனான பட்டம் பெற்றவர்கள், அல்லது உளவியல் பாடம் உட்பட ஆரம்ப அல்லது பட்டப்பின் பட்டத்துடனான பட்டதாரிகள், அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஆலோசனை பற்றியதான நிறவனங்களில் குறுகிய காலப்பயிற்சிச் சான்றிதழகளுடன் விண்ணப்பிக்க முடியுமெனக் கோரப்பட்டுள்ளது.

தற்போது பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வேலைசெய்துவரும் ஆசிரியர்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படப் பிரதிகளுடன் தமது விண்ணப்பங்களை - பிரதிக்கல்விப் பணிப்பாளர், வழிகாட்டல் ஆலோசனைக்கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கும்படி வேண்டப்பட்டுள்ளனர். (31)

# பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்துக்கு பெற்றோர் வழிகாட்டியாக இருக்கவேண்டும்

## விரிவுரையாளர் கனகலிங்கம் தெரிவிப்பு

(வடமராட்சி)

மாணவரின் கல்வியிலே பரம்பரைக் காரணிகளும், சூழல் காரணிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது ஆராய்ச்சியாளர் முடிவாகும்.

இவ்வாறு அண்மையில் தென் புலோலி குரும்பகட்டி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற கல்விக் கருத்தரங்கு ஒன்றில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய கல்வியியற்துறை விரிவுரையாளர் மு.கனகலிங்கம் தெரிவித்தார்.

ஓய்வுபெற்ற காணிப்பதிவாளர் க.மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் அவர் தொடர்ந்து பேசுகையில் -

பிள்ளைகள் அமைதியாக இருந்து கற்பதற்கு ஏற்ற ஒழுங்குகளைப் பெற்றோர்கள செய்து கொடுக்கவேணடும். கற்கும் நோக்கங்களிலே சூழலிலே சந்தர்ப்பங்களை உண்டாக்கி, மாணவர்களின் கவனத்தைத் திசை திருப்பும் அல்லது கவனத்தைச் சிதறடிக்கும் காரியங்களில் ஈடுபடுவது பொருத்தமான காரியமல்ல.

கடினமான விடயங்களைக் கற்ற மாணவன் ஒருவன் சிறிது ஓய்வு எடுப்பது அல்லது நித்திரை செய்வது சிறந்தது. ஏனெனில், தற்போது சில இடங்களிலே சிக்கலான விடயங்களைக் கற்றவுடன் அதை மீண்டும் ஒருமுறை ஞாபகப்படுத்திப் பார்க்காமல், வீட்டிலே வந்து 'நான் இவ்வளவு நேரமும் படித்துவிட்டேன் இனி ஒரு படம் பார்க்கப் போகிறேன்' என்று பெற்றோரிடம் கூறிவிட்டு சினிமாவில் மூழ்கிவிடுகிறான்.

இது முன்னர் கற்ற விடயங்கள் ஞாபகத்தில் இருப்பதற்கு "அகத்தடை"யாக அமைந்துவிடுகிறது. இப்படியான விடயங்களிலே பெற்றோர்கள் அவதானமாக இருந்து தமது பிள்ளைகளை வழிகாட்ட வேண்டும்.

மாணவன் ஒருவன் தனது உயர் கல்விக்கான துறையைத் தெரிந்தெடுக்கும்போது, தனது நண்பர்களின் அபிலாசைகளுக்கு ஏற்பவே செயற்படுவதைக் காண்கின்றோம். தனது ஆற்றல் எந்தத் துறையிலே உண்டு, தனக்கு விருப்பமானது என்ன? என்றுகூடத் தெரியாமல் பல மாணவர்கள் காணப்படுகின்றனர். எனவே, பெற்றோர்கள் தம் பிள்ளைகளைத் தொடர்ச்சியாக அவதானித்து பிள்ளையின் ஆற்றலுக்கும், அக்கறைக்கும் உரிய துறையைத் தெரிந்துகொள்ள உதவுதல் வேண்டும்.

மேலும், பெற்றோர் தமக்குக் கிடைக்காமல்போன துறை தனது பிள்ளைக்குக் கிடைக்கவேண்டும் என்ற வகையிலே செயற்படுதல் கூடாது.

இன்று எல்லோருக்கும் "கல்வி வாழும்வரை கல்வி" என்ற கருத்துக்களே வலுப்பெற்று வருகின்றன. பரீட்சை ஒன்றிலே தனது பிள்ளை ஒருமுறை சித்திபெறத் தவறியதற்காக முயற்சிகளைக் கைவிடாமல், விருப்பமான துறையிலே பிள்ளையைக் கற்க விடவேண்டும். கல்வியே எங்கள் பிள்ளையை எல்லாத் துன்பங்களிலிருந்தும் விடுவிக்கும் என்றார். (17)

### வேலைவாய்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

கமத்தொழில், கால்நடைகள், காணிநீர்ப்பாசன அமைச்சின் காணிப் பயன்பாட்டுக் கொள்கைகள் திட்டமிடல் பிரிவு, புவியியல், விவசாயம், சமூகவியல் பட்டதாரிகளிடமிருந்து காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர் - தரம் II உதவிப்பணிப்பாளர் (விவசாயப் பொருளியல்) ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில், காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர் - தரம் II பணிநிலையானது வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள மாவட்டங்களில் வெற்றிடமாகவுள்ள இடங்களுக்கெனச் சிறப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய இறுதித் திகதி எதிர்வரும் 27 ஆம் திகதியாகும். இவை தொடர்பான மேலதிக விபரங்களை - 1354 ஆம் இலக்க, இந்தமாதம்-13 ஆம் திகதிய வர்த்தமானிப் பத்திரிகையில் பார்வையிடமுடியும். (31)

### வீதி புனரமைப்பு

(அச்சுவேலி)

வலி.கிழக்குப் பிரதேச சபையின், அச்சுவேலி உப அலுவலக எல்லைக்குள் அமைந்துள்ள அச்சுவேலி வைத்தியசாலை வீதி புனரமைக்கப்படவுள்ளது. இதன் ஆரம்பகட்ட வேலைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த வீதியில் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை மற்றும் சிறுவர் பாடசாலை என்பன அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (90)

### சிறுவர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சிறுவர் நலத்திட்டத்தின்கீழ் - யாழ். குடாநாடெங்கும் சிறுவர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

அண்மைக்காலமாக யாழ்.குடாநாட்டில் சிறுவர் உரிமைகளும், சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களும் அதிகரித்துவருகின்றன. இதனைக் கருத்திற்கொண்டே தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இந்த விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரதிநிதிகள் குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று, உரிமைகள் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், கருத்தூட்டல் நிகழ்வுகளையும் நடத்திவருகின்றனர். உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர். (17)

# குன்றும் குழியுமாகக் காணப்படும் கோண்டாவில் - இருபாலை வீதி

கோண்டாவில் - இருபாலை வீதி திருத்தப்படாது நீண்டகாலமாகக் குன்றும் குழியுமாகக் காணப்படுவதாக, இந்த வீதியூடாகப் பயணஞ் செய்யும் பொதுமக்களால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலாலி வீதியையும், காங்கேசன்துறை வீதியையும் இணைக்கும் இந்த வீதியூடாகத் தினமும் பல நூற்றுக் கணக்கான மக்கள் பயணம்செய்து வருகின்றனர்.

ஆனால், நீண்டகாலமாகத் திருத்தப்படாத இந்தவீதி, குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் சைக்கிள், மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களில செல்வோர் பலத்த சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

இந்த வீதியின் ஒருபுறம் ஆழமான கழிவுநீர் வாய்க்கால் காணப்படுவதால், இந்த வீதியூடாகப் பயணம்செய்வோர் பெரும் ஆபத்துக்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது. செப்பனிடப்படாத இந்த வீதியைச் செப்பனிட்டுத் தரும்படி நல்லூர்ப் பிரதேச சபைக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டபோதும், இதுவரை இந்தவீதி திருத்தப்படவில்லையென மக்கள் விசனம் தெரிவித்தனர். (லெ)

# கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த மக்கள் ஒத்துழைப்பதில்லை!

## நல்லூர் பிரதேச சபை செயலாளர்

(கோண்டாவில்)

கோண்டாவில் பகுதியில் பொது மக்களது போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு, இந்தப்பகுதிப் பொதுமக்களது ஒத்துழைப்புக் கிடைக்கவில்லையென நல்லூர்ப் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார்.

இந்தப்பகுதி வீதிகளில் அலைந்து திரியும் கட்டாக்காலிக் கால்நடைகளால், போக்குவரத்தில் ஈடுபடுவோருக்கு இடையூறுகள் ஏற்படுவதாகவும், இவற்றினால் வீதி விபத்துகள் ஏற்படுவதாகவும் பொதுமக்களால் முறையிடப்பட்டிருந்தது.

இதனையடுத்து இந்தப்பகுதி வீதிகளில் அலைந்து திரியும் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, நல்லூர்ப் பிரதேச சபையினர் முன்வந்தபோதும், இந்தப்பகுதி கிராம சேவகரோ, பொதுமக்களோ தமக்கு உரிய ஒத்துழைப்பை நல்குவதில்லை என நல்லூர்ப் பிரதேசசபைச் செயலாளர் கவலை தெரிவித்தார்.

பொதுமக்களது ஒத்துழைப்பின்றி இத்தகைய செயற்திட்டங்களை மேற்கொள்ள முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சந்நிதியான் உற்சவம் இன்று ஆரம்பம்!



(வடமராட்சி)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 7.45 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 24 ஆம் திகதி காலை 9 மணிக்குப் பூங்காவனமும், 25 ஆம் திகதி கைலாசவாகனமும் 28 ஆம் திகதி சப்பறமும், 29 ஆம் திகதி தேர் உற்சவமும், 30 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. காலைத் திருவிழா 8 மணிக்கும், இரவுத் திருவிழா மாலை 4.30 மணிக்கும் நடைபெறும். புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் 27 ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

# சின்னஞ்சிறு செய்திகள்

### வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்குக் கொடுப்பனவு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கில் உலக வங்கியின் நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ள வீட்டுத்திட்டத்தில், பயனாளிகளுக்குரிய முதற்கட்டக் கொடுப்பனவாகிய 15 ஆயிரம் ரூபா கடந்தவாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ் இந்தப் பிரதேசத்தில் ஆழியவளைக் கிராமத்திலுள்ள 25 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வீடுகளைக் கட்டிமுடிப்பதற்கு 15 ஆயிரம், 35 ஆயிரம், 70 ஆயிரம், 30 ஆயிரம் என கட்டம் கட்டமாக வழங்கப்படவுளளது. (17) (122) (21)

### தண்ணீர் தாங்கி நிர்மாணிக்கப்படவுள்ளது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் புதிதாக ஒன்றரை லட்சம் ரூபா செலவில் குடிதண்ணீர் தாங்கி ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

வெளிநாடுகளில் வாழும் பழைய மாணவர்கள் இதற்கான நிதியுதவியைக் கட்டம் கட்டமாக வழங்கவுள்ளனர்.

முதற்கட்டமாக ஒரு தொகுதி நிதி இந்த வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளைத் தலைவர் எஸ்ஏகாம்பரநாதன் ஊடாக வித்தியாலயத்துக்கு வந்துசேர்ந்துள்ளது. (14)

### இன்பர்சிட்டி விநாயகர் ஆலய மகோற்சவம்

(வல்வெட்டித்துறை)

வியாபாரிமூலை இன்பர்சிட்டி சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தேர்த்திருவிழா 28 ஆம் திகதி சனிக்கிழமையும், தீர்த்த உற்சவம் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் சிறப்பாக நடைபெறவுள்ளது. (14)

### திருத்தப்படாத வீதிவிளக்கு

(பருத்தித்துறை)

நல்லூர் பருத்தித்துறை வீதியுடன் சட்டநாதர் வீதியை இணைக்கும் சந்தியில் அமைந்துள்ள வீதி விளக்குப் பழுதடைந்த நிலையில் காணப்படுகிறது. மக்களின் பாவனை கூடிய இந்தப் பிரதேசத்தில் இரவு வேளையில் செல்கின்ற மக்கள், பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். குறிப்பாக சிறுசிறு விபத்துக்கள் அதிகம் நிகழ்கின்றன. (90)

### சைக்கிள் உரிமத்தகடு விநியோகம்

வலி.கிழக்கு பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலகத்தில் 2004 ஆம் ஆண்டுக்குரிய சைக்கிள்களுக்கான உரிமத்தகட்டை இதுவரை காலமும் பெற்றுக்கொள்ளாமலிருந்த துவிச்சக்கரவண்டி உரிமையாளர்களுக்கு, அச்சுவேலி பொதுச் சந்தைக்கு முன்பாக வைத்து பொலிஸாரின் உதவியுடன் உரிமத்தகடு விநியோகிக்கப்பட்டுவருகிறது.

இத்துடன் இந்தப் பிரதேசத்தில் பொலிஸார் துவிச்சக்கரவண்டி உரிமத்தகட்டுச் சோதனையைத தவிரப்படுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (90)

### தரம் 8 மாணவர்களுக்கு விசேட செயற்திட்டம்

(வடமராட்சி)

யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் வடமராட்சிக் கல்வி வலயத்தில் தரம் 8 மாணவர்களுக்கு தமிழ், கணிதம், ஆகிய பாடங்களில் விசேட செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தச் செயற்திட்டத்தால் இந்தக் கல்வி வலயத்தின் 49 பாடசாலைகளைச் சேர்ந்த 1086 மாணவர்கள் பயனடைகின்றனர்.

சென்ற வருடம் தரம் 6 வகுப்பில் 30 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பயன்பெற்றனர். (122)

### கட்டாக்காலி நாய்களால் தொல்லை

பொன்னாலைப் பிரதேசத்தில் பெருந்தொகையான கட்டாக்காலி நாய்கள் பெருகிக் காணப்படுவதால், மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஏற்கனவே பலர் கட்டாக்காலி நாய்களால் கடியுண்ட சம்பவங்களும் உணடு. இந்தப் பிரதேசத்தின் பெரும்பகுதி கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

முகாமகளில் பெருந்தொகையான கட்டாக்காலி நாய்கள் பெருக்கிக் காணப்படுகின்றன. இவை மக்களையும், கால்நடைகளையும் கடித்துக் குதறுவதால் இந்தப்பகுதி மக்கள் பெரும் விசனமடைந்துள்ளனர். (47)

### கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்க, வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தப் பகுதிகளிலும், கடற்கரைகளிலும் பெருமளவிலான கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கப்படவுள்ளன. (21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தெளிவு




**எஸ்.விஜி**

"தம்பி, கனகு வாறான், நீ காண வேணுமெண்டு வந்த உடனே சொன்னாய், எழும்பு ஆள் நல்லா உடைஞ்சு போட்டான். பாவம்"

வேப்பமர நிழலில் படுத்துக் கிடந்த என்னை அம்மா எழுப்புகிறார். பயண அலுப்பு, மனதில் சோகம், இனி என்ன செய்வது என்ற பயம். எல்லாம் இணைந்த வாழ்வைத் தொலைத்துவிட்ட ஒரு திகில் உணர்வு. கன்றைத் தொலைத்துவிட்ட பசுவைப் போல, நித்திரையைத் தொலைத்துவிட்டு உழலும் அவஸ்த்தையில் நான் படுத்துக்கிடக்கின்றேன்.

அழகிய, அமைதியான எனது ஊரில் காலத்துக்குக் காலம் அரங்கேற்றப்படும் இன அழிப்பின் ஒரு கட்டம் முடிவடைந்த பின் கண்ணுக்கெட்டிய தூரம் வரை அங்கொன்றும், இங்கொன்றுமாக வீடுகளின் மண் சுவர்கள் மட்டுமே எஞ்சி நிற்கின்றன. சிற்றோடைகள் ஊடறுக்க நீண்டு வளாந்திருக்கும் தென்னைகளும், கமுகுகளும் தள்ளிய குலைகளைப் பார்ப்பவர்களது கண்படா வண்ணம் காவோலைகள் மறைத்திருக்க, தலைகவிழ்ந்த மணப்பெண்போல் பாரம் தாங்காது நிலம் நோக்கி வளைந்திருக்கும் நெற் கதிர்களை வருடி வரும் காற்று உடம்பைத் தொட்டுச் செல்ல, மஞ்சளும் பச்சையும் கலந்து மணி ஐயா தீட்டிய ஓவியம்போல நெஞ்சிலே பதிந்துவிட்ட எனது ஊரை இன அரக்கர்கள் புகுந்து தாண்டவமாடி எரித்துவிட்டுச் சென்று இன்றுடன் எட்டு நாள்கள் கடந்துவிட்டன. ஊரோடு சேர்ந்த நானும் எரிந்திருந்தால் இந்த அவஸ்த்தை எனக்கு இருந்தீருக்காதோ? அந்த வேளையில் நான் ஊரில் இல்லையே. அது நான் செய்த பாவமா? நட்புக்களையும், உறவுகளையும் தொலைத்துவிட்டு நான் மட்டும் வாழ்வதன் சுமை, அது சுமந்தவர்களுக்குத் தான் தெரியும்.

நான் வேப்பமர நிழலில்தான் இன்னும் படுத்திருக்கின்றேன். தீ அரக்கனுக்கு தனது கூரைகளையும், தான் பாதுகாத்து வந்த சொத்துக்களையும் பறிகொடுத்துவிட்டு மூளியாய் எழுந்து நிற்கும் மண் சுவர்களே அங்கொன்றும் இங்கொன்றுமாக கண்ணுக்குத் தெரிகின்றன. நகரத்தின் நரக வாழ்க்கை முறையில் அடிபட்டுப் போகாது, இயற்கையோடு இணைந்திருந்த எனது கிராமத்தின் உயிர், கைக்குண்டுகளுடனும், து""ாக்கிகளுடனும் கனரக வாகனங்களில் வந்திறங்கிய ஆயுதம் தரித்த அரக்கர்களினால், ஓர் இரவிலேயே அழிக்கப் பட்டுப்போக, சிதறிஓடிய எனது உறவுகள் காடுகளிலும், அயல் கிராமப் பாடசாலைகளிலும் தஞ்சமடைந்திருந்தன.

உயர் கல்வித் தேவைக்காக எனது ஊரை விட்டு யாழ்ப்பாணம் சென்றிருந்த எனக்கு, இந்த அழிவுச் செய்தியை ஆறு நாட்களின் பின்னரேயே முழுமையாக அறிந்து கொள்ள முடிந்தது. மிகுந்த சிரமத்துக்குப் பிறகு ஒருவாறு ஊர் வந்து சேர்ந்தால், பார்வை எட்டும் தூரத்துக்கு ஒரு வீடு கூட முழுமையாக. முன்னைய அழகுடன் கண்ணுக்குத் தெரியவில்லை.

இழப்பை அனுபவிக்காத ஒரு உறவைக்கூடக் காணவில்லை. என்னால், இதனை ஜீரணிக்க இயலவில்லை. அதுதான் இதோ இந்த வேப்பமர நிழலில் சுருண்டு கிடக்கின்றேன். மனது என்ன? மரணித்து விட்டதா? அழக்கூட முடியவில்லையே. நான் இறந்து விட்டேனா? இல்லை. இல்லை. நான் சுவாசிக்கின்றேன். எனது உடம்பை என்னால் பார்க்க முடிகின்றது. நான் இறக்கவில்லை. உண்மைதான். ஆனால், அழமுடியவில்லையே. உணர்ச்சிகளை உரிய வகையில் வெளிக்காட்ட முடியாதவன் மனிதன் இல்லை என்றால் இப்போது நான்...?

"தம்பி, கனகு வந்து மாமரத் தடியில் குந்தி இருக்கின்றான், போ... போய் அவனோட கதை. எழும்பு, பாவம் பொடியன்" சாமி அறையின் நான்கு சுவர்களுக்குள் எரிந்து குவிந்திருந்த சாம்பல் குவியலைக் கிளறியபடி அம்மா கூறுகிறார்.

ஏதோ ஒரு பொருளைக் கண்டு விட்டார் போலும். அவவின் பிரச்சினைகள் அவவுடன், எனது பிரச்சினை... அழக்கூட உணர்ச்சியற்ற ஜடம்.

"சந்திரன் என்ன நீ, அங்க அவன் பாவம் எல்லாத்தையும் காவு கொடுத்துப் போட்டு, குந்தி இருக்கிறான் பைத்தியம் பிடிச்சவன் மாதிரி. இஞ்ச நீ என்ன செய்யிறாய்?" "எழும்பு, போ. அவனுக்கு ஆறுதல் சொல்லு. எழும்பு..." அம்மாவின் குரல் அதட்டலா? அறிவுரையா? விளக்கம் பெற முடியவில்லை.

இறந்து போனது புலன்களா? அல்லது மூளையின் சில பகுதிகளா? ஒன்றும் புரியவில்லை. போகட்டும் புரியாமலேயே போகட்டும். இப்போது எனது உடனடி நடத்தை எழுந்து போய் கனகைச் சந்திக்க வேண்டும். ஆறுதல் கூறவேண்டும். குருடனுக்கு குருடன்வழிகாட்டும் நிலை.

நான் மெல்ல எழுந்து, கனகு குந்தி இருந்த மாமர நிழலை நோக்கி நகர்ந்தேன். கனகசிங்கம் எனது பள்ளித்தோழன். ஒரே பாடசாலையில் முதலாம் வகுப்பு முதல் ஏ.எல் வரை இணைந்து வந்தவர்கள் நாங்கள். அதே பாடசாலையில் இனறு ஆசிரியர்களாகவும் இணைந்திருக்கின்றோம்.

இரு வீட்டிலுமே எங்களை இரண்டாகப் பார்த்ததில்லை. [illegible] னாக, அவன் நானாக வாழ்ந்ததில் வெட்கப்பட்டதும் கிடையாது. ஆனால், போன வெள்ளிக்கிழமை இரவு முதல் கனகசிங்கம் தொலைந்து போனான்.

அந்த இரவுதான் புத்தரின் புத்திரர்களால் எனது ஊர் அழிக்கப் பட்டது. குரங்குகளின் கைகளில் சிக்கிய பூமாலையாகச் சிதைந்து போனது. அன்றுதான் கனகசிங்கமும் தொலைந்து போனான். காட்டினுள்ளே பதுங்கிக் கொண்டதனால் எனது குடும்பம் ஏதோ ஒரு விதத்தில் உயிர் உறையும் உடல்களை மாத்திரம் காப்பாற்றிக் கொண்டது. உடைமைகளையும், உறவுகள் சிலரையும் குரங்குகள் அள்ளிக்கொணடு போனதோடு, நாங்கள் குடியிருந்த கோயிலையும் எரித்துவிட்டுப் போயின. காணாமற்போன உறவுகளின் உடல்களைக்கூட தேடிப் பெற முடியாது, தெருவோரங்களில் எரிந்தும்



எ பாமலும் கிடந்த ரயர்க் குவியல்களைக் கிளறிப் பார்த்தபடி தெருவில் தவித்தன. காடுகளில் இருந்து திரும்பிய உறவுகள். உலக உணர்ச்சிகளை ஒட்டுமொத்தமாக குத்தகைக்கு எடுத்தவைபோல், அவை நிமிடத்துக்கு ஒரு உணர்ச்சியைக் கொட்டித்தீர்த்தன.

கனகு மாமர வேர்மீது குந்தி இருக்கின்றான். விதவையாகிப் போய் விட்ட ஊரின் ஒரு மூலைக் கோடியில் ஏதோ ஒன்றை வெறித்துப் பார்த்தபடி. நான் அவனது தோள்களில் மெல்லக் கை வைக்கின்றேன். அவனில் சலனமில்லை. எனது கைகள் அவனது தோளை சற்று அழுத்த "கனகு" என்கின்றேன். வார்த்தை இல்லை: ஆனால், மெல்ல முகம் திரும்பினான். எனது கண்களை உற்று நோக்கினான். யாரிவன்? எனது கனகு எங்கே போனான்? இந்தக் கண்கள் எதனைக் கூறுகின்றன? ஒரு நிமிடம், ஒரே ஒரு நிமிடம் தான் என்று நினைக்கின்றேன். என்னை இழுத்து விழுத்தி, என்மேல் விழுந்தவன் தேம்பித் தேம்பி அழுகின்றான். அழட்டும். நன்றாக அழட்டும். இன்று எங்களில் பெரும்பாலானவர்களிடம் எஞ்சி இருப்பது அது ஒன்று [illegible] கின்றேன்.

நான் உள்ளே அழுதபடி. இறுக்கம் இருவரிடமும் சற்று தளர்கிறது. "எப்படியடா?..." நான் வார்த்தைகளைத் தொலைத்துவிட்டு தடுமாறுகின்றேன்.

"அப்பதாண்டா இரவுச் சாப்பாடடை முடிச்சிட்டுப் படுக்கப் போனம். குளக் கட்டால றக்குகள் வாற சத்தம் பெரிசாக கேட்டுது. நான் வெளியில வந்து குளக்கட்டுப் பக்கம் பார்த்தன். அங்க ஒன்பது றக்குகள் வரிசையா வந்தது. வெளிச்சங்களில் தெரிஞ்சது.

ஏதோ நடக்கப் போகுது எண்டு நினைச்சுப் போட்டு, உடனே வீட்டுக்குள்ள ஓடி தாமரையிட்ட சொன்னன். அப்ப அவள் நித்திரையாக் கிடந்த பிள்ளையத் தூக்கி என்னட்ட தந்து விட்டு, சாமியறைக்குள்ள போய், பை ஒண்டுக்குள்ள ஏதோ கொஞ்ச சாமானுகள் எடுத்துப் போட்டுக் கொண்டு வந்து சொன்னாள், "அத்தான் ஆத்தோரம் போய் இருப்பம். விடிஞ்சப்புறம் நிலைமையைப் பார்த்து வருவம்" எண்டு சொன்னாள்.

கனகு கண்களை மூடி மூச்சை நன்றாக இழுத்து விட்டபடி, மௌன மானான். நானும் அவனது கரங்களை மெல்ல அழுத்தியபடி, நன்றாக மூச்சை உள்ளெடுத்து சத்தமாக வெளிவிடுகின்றேன்.

கனகு தொடர்ந்தான்.'' எனக்கும் பயத்தில் அவள் சொன்னது சரியாத் தான் பட்டது. இரண்டு பேரும் பிள்ளையோட போய் ஆத்தோரம் அந்த நாவலடிக்கு கீழ, சீமைப் புல்லுக்குள்ள கிடந்தம்.

சனங்களெல்லாம் திக்குத் தெரியாம அங்கால, இஞ்சால எண்டு ஓடித் திரிஞ்சுதுகள். அவனுகள் ஊருக்குள்ள வந்துட்டானுகள். முதலில் கந்தசாமியார் வீட்டுப் பக்கம் வெடிச் சத்தம் கேட்டுது, பெரிசா அழுத சத்தமும் கேட்டது. கொஞ்சாத்தால வீடு பத்தி எரியுறது தெரிஞ்சது. மெல்ல மெல்ல வெடிச்சத்தங்கள் கிட்டக் கிட்டக் கேட்டுவர, வீடுகளும் ஒன்டொண்டா பத்தி எரிஞ்சுது, இடையில அலறல் சத்தமும் கேட்டுது.

தாமரை பாவம் நல்லா பயந்திட்டாள் போல, தண்ணிக் குளிரும்வேற. மெல்ல என்ர உடம் போட நனைஞ்ச கோழிக் குஞ்சுமாதிரி உட்டிக் கொணடு அழத் தொடங்கிற்றாள்."

கனகு மௌனமானான். நினை வுகள் அறுந்துவிட்டதா? அல்லது அழுத்திவிட்டதா? ஏதோ ஒன்று கனகுவைத் தாக்கியிருக்கவேண்டும்.

நான் அவனது முதுகைத் தட்டிக் கொடுக்கின்றேன் மௌனமாக. மௌனத்தைப் போல் சிறந்த மொழி இதுவரை உலகில் இல்லை என்பது உண்மைதானோ? ஒரு சிறிய விம்மலோடு, மூக்கை உறிஞ்சி உள்ளிழுத்தபடி கனகு தொடர்ந்தான். "ஒண்டும் நடக்காது பயப்பிடாத, இஞ்சால வரமாட்டானுகள் எண்டு நான் சொல்லி சமாளிச்சன்ரா.

ஆனா உள்ளுக்குள்ள எனக்கு பயமாத் தான் இருந்திச்சி. தாமரை பாவி, அப்பகூட தனது நகைகளை ஆராரிட்ட இரவல் கொடுத்திருக்கெண்டும், சீட்டுக்காசு யாராரிட்ட இருக்கு எண்டும், நினைவுபடுத்திச் சொன்னாளெடா. நான் அவளை அரட்டிப் போட்டு இப்ப உனக்கு இதுதானா கதை? எண்டு கேட்டன். அப்ப அவள் சொன்னாள்.

அத்தான் நீங்க ஆம்பிள, நல்லா நீந்துவீங்க. இப்ப இஞ்ச அவனுகள் வந்தாலும் பிள்ளையக் கொண்டு ஆத்தக்கடந்து காட்டுக்குள்ள போயிடுவீங்க.

அதுதான் இது வளச் சொல்லுறன் எண்டு அவள் சொல்லி முடிக்க, முதல் வெடிச்சததங்கள் மிகக் கிட்டவா கேட்டதுடா. அப்ப தாமரை தான் சொன்னாள், அத்தான் பிள்ளையைக் கொண்டு அங்காலக் கரையில் யாராச்சும் ஒரு வரிட்டக் குடுத்துப்போட்டு, திரும்பி வந்து என்னைக் கூட்டிக் கொண்டு போங்க எண்டு.

அந்த நேரம் என்னால சொந்தமாக யோசிச்சு முடிவெடுக்கத் தெரியாமப் போச்சு. பயத்துல நானும் சரி எண்டு போட்டு, பிள்ளயோட ஆத்தில இறங்கி நீந்தத் தொடங்கினன்.

நான் இறங்கிய இடம், சுழிக்கிற இடம் எண்டு அந்த இருட்டுல கண்டு கொள்ள முடியாமப் போச்சு. அண்டைக்கு எண்டு தண்ணியும் ஆத்துல கூட வந்ததுடா.

நானும் கொஞ்சத்தூரம் பிள்ளையோட நீந்திப் பார்த்தன். தண்ணி இழுக்கத் தொடங்கிற்று. ரெண்டு மூணு தரம் நானும் பிள்ளையும் தண்ணிக்குள்ள தாண்டெழும்பினம். பிள்ளை பயத்தில திமிறத் தொடங்கிற்றாள்.

நீந்த அதுவும் கஷ்டமாப் போச்சுது. எங்க ரெண்டு பேருமே செத்துப் போயிடுவமோ என்ற பயமும் வந்திற்று.

என்னால தொடர்ந்தும் நீந்த ஏலாம போக, பிள்ளையக் கைவிட்டுப் போட்டு நான் நீந்தத் தொடங்கிற்றன். அந்த நேரம் அதைத் தவிர வேறு எந்த வழியும் தெரியல்லடா. ஒரு மாதிரி நீந்திக் கரையேறி காட்டுக்குள்ள போய்ப் பார்த்தா, ஒருத்தரையும் காணக்கிடக்கல்ல. எல்லாரும் பயத்தில காட்டுக்குள்ள கனதூரம் போயிட்டானுகள்.

நான் திரும்பி வரப் பயத்தில இரவு முழுக்க அக்கரையில் நிண்டு போட்டு, விடிஞ்சப் பிறகு மற்ற ஆக்களோட சேர்ந்து ஊருக்குள்ள வந்து பார்த்தா, தாமரையையும் காணக்கிடைக்கல்லையடா. ஆத்து நீட்டுக்கு ஹாஜியார் வயல் தொடக்கம் மட்டும் போய்ப் பார்த்தம்.

ஒரு தடயமும் கிடைக்கல்லையடா? பாவி நான் இந்தக் கையாலயே என்ர வம்சத்தைப் பறி கொடுத்துப் போட்டு இப்ப தவிக்கின்றனடா.

அவளுக்கு என்ன நடந்தது? இருக்கிறாளா? இல்லையா? ஒண்டுமே தெரியாத பைத்தியக்காரனா திரியிறன்டா இப்ப. பிள்ளையின்ர உடம்பைக்கூட கண்டு பிடிக்க ஏலாமப் போட்டுதடா.

உலகத்தில யாருக்குமே இப்படி ஒரு துயரம் வரக்கூடாதுடா. சந்திரா வரக்கூடாதுடா..." ஓ... வென பெரிதாக சத்தமிட்டு அழும் கனகுவை அணைத்தபடி நானும் அழுகின்றேன்.

மூன்று வயது அந்தப் பிஞ்சுக் குழந்தை துருதுருத்த கண்களும், உப்பிய அப்பிள் கன்னங்களுமாக மாமா மாமா என ஓடிவந்து எனது கால்களைப் பற்றியபடி அண்ணாந்து எனது முகத்தைப் பார்ப்பதுபோல மனதுள் ஒரு காட்சிப் படமாக விரிகிறது. பாழாய்ப்போன மனது. எதை எப்பொழுது எப்படி நினைப்பது என்பது தெரியாமல் ஜடமாகத் தொழிற்படுகின்றது.

குமுங்கி அழுது கொண்டிருந்த கனகு குனிந்து சாரத்தை எடுத்து முகத்தை அழுத்தித் துடைக்கின்றான். மெல்ல எனது கைகளை விடுவித்தபடி மெதுவாக எழுந்து எங்கோ போகின்றான்.

நடையில் சற்று தெளிவு தெரிகிறது. நான் மாமரத்தின் கீழேயே துவண்டு கிடக்கின்றேன்.

அவனது சிலுவை இப்பொழுது என்னிடம் தரப்பட்டுள்ளது. எனது மூளையின், எங்கோ ஓர் மூலையில் சின்னதான ஒரு ஒளிக்கீற்று. ஆம் நான் வாழவேண்டும். நாங்கள் வாழ வேண்டும். நான் மெல்ல எழுகின்றேன்.

"பூமாரங்" எனது வாய் மெல்ல முணுமுணுத்துக் கொள்கிறது. *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் அகம்




தேசிய கலை இலக்கியப் பேரவையின் கலை இலக்கிய, சமூக விஞ்ஞான இதழான தாயகம் ஐம்பதாவது இதழ் அண்மையில் வெளிவந்துள்ளது. எண்ணிக்கை, வருகை ஒழுங்கில் இது ஒரு சாதனை அல்ல. எனினும், தாயகம் ஏற்றுக்கொண்ட இலக்கையும், பயணித்து வந்த கால கட்டத்தையும் வைத்து நோக்கும்போது - விமர்சகர்களின் கண்களுக்கு அது படாவிட்டாலும், தனது வருகைக்கு ஒரு பெறுமானம் உண்டு எனக் கணித்துக் கொள்கிறது'

எனினும், ஆசிரிய தலையங்கம் உள்ளடக்கும் வரிகள் மனங் கொள்ளத்தக்கவை.

இந்த இதழில் மணி, மாவைவரோதயன், சாருமதி, த.ஜெயசீலன், அழ.பகீரதன், சாரங்கா, காவத்தையூர் மகேந்திரன், தி.திருக்குமரன், இ.சிவலிங்கம், சிவபாலன், ஜீ.கிருபானந்த், எஸ்.பி.பாலமுருகன், மீநிலா ஆகியோரது கவிதைகளும்- க.சட்டநாதன், ச.முருகானந்தன், சாந்தன், வனஜாநடராஜா ஆகியோரது சிறுகதைகளும் - இ.முருகையன், ந.சுரேந்திரன், க.வேல்தஞ்சன், சாந்தன், அ.க.தெய்வேந்திரன், லெனின் மதிவானம், சீராளன், மிதுனி, க.வே.தனஞ்சயன் ஆகியோரது கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

கவிதைகளில் மஹ்மூட்டர்வீஷ் எழுதி, தமிழில் மணிமொழி பெயர்த்துள்ள 'ஒரு நாடோடி இசைப்பாடல்' எனும் கவிதை குறிப்பிடக்கூடிய ஒன்று.

சிறுகதைகளில் க.சட்டநாதனின் 'அனுமதி' மைக்கல் றெக்கோட் எழுதி சாந்தன் மொழிபெயர்த்துள்ள 'வகுப்பு' ஆகியன ஓரளவுக்கு நல்ல வாசிப்பனுபவத்தைத் தரக்கூடியவை.

கட்டுரைகளில் 'உடன்படிக்கையின் பெயரால்...'எனும் சீராளனின் கட்டுரை உடன்படிக்கை பற்றிய மேலோட்டமான வரலாற்றுக் குறிப்புகளைத் தருகின்றது. மறைந்த சீன எழுத்தாளர் பாஜினின் 'எனது வாழ்வும் இலக்கியமும்' எனும் ந.சுரேந்திரனின் மொழிபெயர்ப்புக் கட்டுரையும், ஹரி மக்டொவ் வழங்கிய நேர்முகத்தின் க.தனஞ்சனது மொழிபெயர்ப்பும் ஒரு விதத்தில் முக்கியமானவைதான். மேலும் குலோத்துங்கன் கவிதைகள் பற்றிய கவிஞர், இ.முருகையனின் நூல்நோக்கும், க.வேல்தஞ்சனின் கைகளுக்குள் சிக்காத காற்றும், த.ஜெயசீலனின் கவிதைத் தொகுப்புக்கான நூல் நோக்கும் கவனிப்பைப் பெறுகின்றன. எனினும், வேல்தஞ்சனின் நூல்நோக்கு வெறும் அபிப்பிராயத் தெரிவிப்பாகக் குறுகி விடுகிறது. 'சமூக நிறுவனங்களும் சமூகச் செயற்பாடுகளும்' எனும் தொடர் வரவேற்புக்குரியது.

- சித்திரன் -

# இலக்கிய முத்து

ஆதியாய் அநாதியாய் அவதரித்த தமிழ் மொழியை ஆதரித்து, நேசக்கரம் நீட்டி நெடுவையத்திலே செம்மொழியாக உயர்த்திவிட்டவர்கள் நம் தமிழ்ப்பாவலர்கள்.

சங்கங்கள் அமைத்து, தமிழ் வளர்த்த நம் தண்டமிழ் மன்னர்களுக்கு அறிவுரை வழங்கும் அமைச்சர்களாக விளங்கிய அருந்தமிழ்ப் புலவர்கள் சமுதாயத்தை நெறிப்படுத்தும் தலைவர்களாகவும், பகை மன்னர்களை ஒன்றிணைக்கும் பரந்த உள்ளம் படைத்தவர்களாகவும் விளங்கினார்கள்.

தம் காலப்பகுதியில் வாழ்ந்த அனைத்துப் புலவர்களும், சமூக உறவிலே தமக்குள் நல்லதொரு நட்பைப் பேணி வந்தனர். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என தம்மிடை சமூக உறவைப் பேணிவந்த அருந்தமிழ்ப் பாவலர்கள் இலக்கியப் பரப்பிலே ஒருவரோடு ஒருவர் முட்டிமோதியும் உள்ளனர். இவர்கள் தமது உள்ளத்துப் பகையால் ஒருவரோடு ஒருவர் மோதவில்லை. தமது கவித்துவத்தினாலே, இலக்கியப் போக்கிலே மட்டும் ஒருவரோடு ஒருவர் சில சந்தர்ப்பங்களிலே சொற்போர் நடத்தியுள்ளனர்.

## கவிராஜராயின்...



இலக்கியச் சுவையோடு பரஸ்பரம் ஒருவரை ஒருவர் நக்கல்களும், கிண்டல்களும், நளினங்களும் செய்துள்ளனர்.

தனது சொற்திறத்தால் நாயக்கர் காலத்தையே கதிகலங்க வைத்த ஆசுகவி காளமேகப் புலவர் ஒருநாள் - திருமலை ராஜன் அவையிலே வீற்றிருந்த ஆஸ்தான வித்துவான்களைச் சந்திக்கின்றார். காளமேகம் அவர்களை நோக்கி - நீங்கள் யாரென வினாவுகின்றார். காளமேகத்தின் புறத்தோற்றத்தைப் பார்த்த ஆஸ்தான வித்துவான்கள், இவன் ஒரு பிச்சைக்காரனாக இருக்கக்கூடும் என்ற எண்ணத்துடன் பெருமிதமாகக் கவிராஜர்கள் எனப் பதிலளித்தனர்.

இவர்களது பெருமிதத்தை உணர்ந்த காளமேகப் புலவர் சும்மா விடுவாரா? வசை பாடுவதில் சிறந்த காளமேகப் புலவர் தனது கவித்துவத்தைக் காட்டிவிடுகின்றார்.

பூமியில் உள்ள மன்னர்களாலே அவையிலே வைத்துப் போற்றப்படுகின்ற புலவர்களே, நீங்கள் கவிராஜர் என்கின்றீர்கள். கவி என்றால் குரங்கு. நீங்கள் குரங்குகளின் அரசர்களா? அப்படி நீவீர் குரங்குகளின் அரசர்களென்றால், உங்களது நீண்ட வாலெங்கே? பருத்த வயிறெங்கே? முன்பக்கத்தில் இருக்கவேண்டிய இரண்டுகால்களும் எங்கே இருக்கின்றன? உள்ளே குழிந்திருக்கும் கண்கள் இரண்டும் எங்கே? எனத் தனது கவித்துவத்தால் ஆஸ்தான வித்துவான்களின் செருக்கை அடியோடு அடக்கிவிட்டார் காளமேகப் புலவர்.

*வாலெங்கே நீண்ட வயிறெங்கே முன்னிரண்டு*
*காலெங்கே யுட்குழிந்த கண்ணெங்கே - சாலப்*
*புவிராயர் போற்றும் புலவீர்கா ணீவீர்*
*கவிராய ரென்றிருந்தக் கால்.*

*(தனிப்பாடற் திரட்டு)*

- லெஸ்லி-

# கலையுணர்வுள்ள கலைஞனுக்கு துன்பமும் இன்பமும் ஒன்றே...

கலைக்காகவே இருக்கக்கூடிய, கலைஞனுக்காகவே உள்ள கலைதான் உண்மையான கலை. அந்தக் கலை சிருஷ்டியின் இயல்பாக, கலை முயற்சியின் சம்பவமான ஒரு பிரியோசனத்துக்கும் - கலைக்கும், அந்த மட்டுமான தொடர்பின்றி வேறில்லை. கலைஞன் கலையுணர்ச்சிக்கென்றே இல்லாமல். கலையியலுக்கென்றே இல்லாமல், தன்னில் உள்ள கிளர்ச்சியின் காரணமாக, ஆத்மாஎாக வுள்ள ஒரு அந்தரங்க ஆதர்சம் அல்லது ஆதங்கத்தை உருவமாகச் சமைக்கும்போது பிறப்பது கலை. கலையியல் என்பதே இவ்வாறு கலைஞன் கண்ட, காண்பித்த ஒரு உணர்வு.

சமுதாயத்தினின்றும் வேறுபட்டு, அதன் நோக்கு, பரப்பு, வரப்பு, விஸ்தீரணம் இவை நீங்கி தனக்கென்றே வாழும் ஒரு வாழ்வு கலைஞனுடையது. உலகத்தின் துன்பத்தையும், இன்பத்தையும் உருப்படுத்தும் கலைஞன், துயரத்திலும், இன்பத்திலும் கலையுணர்ச்சியின் கருப்பொருள்களையே காண்கின்றான். துயரத்தைக் கண்டு துடிப்பவன் கலைஞன் அல்ல. அது அவனுடைய மனித நிழல். அந்தத் துயரத்தில் உணர்வுகொண்டு கிளர்வதே கலையுள்ளம். மனித வாழ்வின் அவலம், ஆசை, ஆனந்தம் - கலை சிருஷ்டிக்கு உரமண்; கலை உரு கடைவதற்கான களிமண்.

சங்கீதானுபவத்துக்கு சாகித்திய உள்ளடக்கம் பெரும்பாலும் தடையாயிருப்பது சாதாரண அனுபவம். சாகித்தியத்தில் உள்ள லோகாயத வெற்றுத்தன்மை பெரும்பாலும் வெறுப்புணர்ச்சியையும், இகழ்ச்சியையும் தூண்டி விடுகிறது. சங்கீதத்துக்கும் சதா காலட்ஷேபத்துக்கும் கலை வெளியில் தாரம்பியம் பாதாளத் தனமுடையது. சமுதாயத்தையும். கலையையும் கலக்கி இனந்தெரியாத கோவேறுகழுதை உண்டு பண்ணுவது கேவலமானது.

'உலகியலைப் புரிந்து கொள்ளச்' செய்யும், 'ஞான போதம் வழங்கவும்' உள்ள ஒரு உயர்நிலையைக் கலைஞனுக்கு அளிக்கவே அவசியமில்லை. இந்த நிலைக்குக் கலைஞன் எந்த விதத்திலும் பாத்திரமாவதில்லை. கலையுணர்வு கலைஞனுக்கு இயல்பாக வந்தது ஞானசாரியநிலை அத்தளவு சுலபமில்லை. எல்லோரும் 'சுகாச்சாரியார்' ஆகிவிட்டால் அப்புறம் ஒன்றுமில்லை.

ஆகவே, கலைஞன் 'பொறுப்பைத் தட்டிக் கழித்தவன்' என்று குற்றம் சாட்டுவதில் பொருளில்லை. கலைஞன் தன்நிலை அகன்று ஞான போதம் செய்ய முற்படும்போது மட்டுமே கண்டிப்புக்கு ஆளாகின்றான்.

கலையால் பிரம்மஞானம் பெற்றவர்களைப் பற்றி நாம் ஒன்றும் கூறுவதற்கில்லை. ஆனால், கலைஞனுக்கெல்லாம் பிரம்மஞானம் ஏற்றுவதுதான் அசட்டுத்தனமானது. தன் போக்கில் போகும் பைராகிக்குத் 'துறவாடை' அளிப்பது தான் அவனைச் சங்கடத்துக்குள்ளாக்குகிறது.

வாசகனுடைய மனதில் கலையெழுப்பும் செருபப் பிரச்சினையும் அவசியமில்லாதது. முதலில், முடிவில் கலைஞன் தனக்காகவே படைக்கிறான். எழுத்தாளனைவிட, சைத்ரீகனுடைய கலை இதைத் தெளிவாக்கும். கலைஞனுடைய கலை உணர்வு உறைக்கப்பட்ட தனி ஒருவனின் கலை உணர்ச்சித் தொடர்பில்லாதது.

கலைப் படைப்பின் உருவத்துக்கும், உள்ளடக்கத்துக்கும் இடையே பாகுபாட்டை அறுதியிடுவது அவ்வளவு சரியானதல்ல. எரிமலைப் பிழம்பில் வழியும் பொருள் உஷ்ணமா அல்லது கற்பாறையா என்று கூறுவது கடினம். உஷ்ணத்துக்கு உரு இல்லை; கற்பாறை குழம்பாக இருக்கமுடியாது. அப்படியானால், இந்தப் பிழம்பின் [illegible] உஷ்ணம், உருகற்குழம்பா? இல்லை. உஷ்ணத்தின்



சேர்க்கையால் பாறை அதன் இயல்பெல்லாம் அகன்று ஒரு புது நிலை எய்துகிறது. உஷ்ணமும், பாறையும் சேர்ந்து வெளிப்படுவது எரிப்பிழம்பு - வேறு நிலையில் கலை சோதனை.


சமுதாயம்பாடுபட்டு அவனுக்களித்த 'நல்வாழ்வுக்கு'ப் பிரதியுபகாரமாகக் கலைஞன் சமுதாய முன்னேற்றத்துக்குப் பாடுபடவேண்டும் என்ற கருத்து பயங்கரமானது.

கலை, மாட்டுக்குக் சோற்றுப் புண்ணாக்குப் போட்டு, கடமைத்தளை பூட்டி அதன் நல்வாழ்வுக்கு வழி செய்ததன் நன்றியறிவு பாரமேற்றி, கட்டியிழு முன்னேற்றத்துக்கு என்பது கலை வாழ் வுக்கல்ல அது வெறும் எண்ணைக் கட்டும் தெழிலாகப் போய்விடும்.

கலைஞனுக்கு சமுதாயம் செய்யும் உதவி அவனைக் கடமைத் தளையிலிருந்து மீட்பது தான். கலை பேணமுயற்படும் சமுதாயம், பரிசிலுக்குப் பாடும் நிலையிலிருந்து கலைஞனுக்கு விடுதலை அளிப்பதுதான்.

ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், ஒவ்வொரு கொள்கைக்குப் பாட்டு போட்ட பண்டிதர் அநேகர். கொள்கை நிலை அழியும் போது, கொள்கையின் மாறுபட்ட இடம் அடையும் போது அது அழிந்துபோகும். ✪

# வதைகள்



புத்த பெருமானின் விழிகளில்
திரண்டு நிற்கும் கண்ணீர்

வலியின் ரணங்களால் துடித்து
இத்தனைக்கும் என் முகத்தில்
இருளின் வியாபிப்பு.

அவலக் குரல் ஒலியின்
ஊடேதான் தெரிந்தது.
வலியின் தகிப்பு.

கண்ணீர் கோடுகளின் நடுவே
குடியிருந்த கோயிலின் நினைவு.

அம்மன் கோவில் திருவிழா
மகிழ்வில் பூத்துக்குலுங்கும் வேளையில்-
குருதியில் சிவந்த வீதி.

வதையின் படலத்தில் - சதைதுண்டங்கள்
சிதைந்திடும் நினைவுகளாய் விரிய

யார்?... எவர்? எவ் காரணம்
புரிய மறுத்த வேளை.

கண்கள் கட்டப்பட்டு பச்சைத் தொப்பிகள்
முன் செத்துப் பிழைத்த இருண்ட நாட்கள.

இறுதியாய் ஓர் விடயம் மரணத்தின் தீர்ப்பின்
முன்னே என் அன்புக்குரியவளை
அடைய முடியாத "சாதி"
என்ற போர்வை மூடியபோது.

அவள் மருந்துண்டு உயிர்
பிழைத்த அந்த நாட்கள்
அன்புக்குரியவளுடன் - இணையும்
அந்த இனிய நாளுக்காய்.

- பவித்திரா -

# மரணித்துப் போயிருக்கலாம்



ஆயிரம் உறவுகள்
அருகிலிருந்தும்,
அந்நியப்பட்டு அனாதையாகிவிட்ட
இப்போதெல்லாம்
எதுவுமே புரிவதில்லை,
மரணித்துப் போயிருக்கலாம்
என்பதைத் தவிர.

மனங்களை புரியாத
மனம்
திருப்பி எடுக்க முடியாத
வார்த்தைகளை வீசிவிட்டு
வேடிக்கை பார்க்கின்றன.
ஊமையாய் அழுதவண்ணம்
காத்திருப்புக்களும்
தொடங்கிற்று.

சில வேளைகளில்
ஏக்கப் பெருமூச்சோடு,
வாழ்வில்
தொலை தூரம் சென்று
திரும்பி வந்தது போல்
தொடர்கிறது
ஞாபகம்.

எப்போதுதான்
புரிந்து கொள்ளப் போகின்றார்கள்
என்கிற சராசரிப் பெண்களின்
ஏக்கங்களைப் போலவே
என் வாழ்க்கையும் முடிந்து
விடுமோ என்றுதான்
இப்போதெல்லாம்
பயமாக இருக்கின்றது.

~ த.ஷால்ஜா~

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்டகால திட்டங்களைத் தீர்மானித்த பின்னரே புனர்வாழ்வு புனரமைப்பு மேற்கொள்ள வேண்டும்

**-அருளர்**

வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கான நீண்டகாலத் திட்டங்களை முன்னுரிமைப்படுத்தும் நோக்குடன், அடுத்த வருடம் ஜனவரியில் திருகோணமலையில் நடைபெறவிருக்கும் கருத்தரங்கு தொடர்பாக யாழ். பல்கலைக்கழக புவியியற்துறையில் அண்மையில் நடைபெற்ற விளக்கக் கூட்டத்தில் நீண்டகால திட்டங்களை முதலில் நெறிப்படுத்தி, நிர்ணயிக்க வேண்டிய தேவையை அருளர் வலியுறுத்தினார். இதில் புத்தி ஜீவிகள், திட்டவல்லுனர்கள் உடன் கவனம் செலுத்தவேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்தார். தற்போது வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கான நீண்டகாலத் திட்டங்கள் பல நிறுவனங்களிடமும், மத்திய, மாகாண மாவட்டமையங்களிலும் உள்ளன. 1990, 1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பேராசிரியர் துரை ராசாவின் தலைமையில் பல திட்டங்கள் தீட்டப்பட்ட நிலையில் உள்ளன. இவை அனைத்தையும் திரட்டி முரண்பாடுகளை நீக்கி, தமிழர் தாயகத்தின் நீண்டகால அபிவிருத்திக்கான ஒரு முகப்படுத்தப்பட்ட திட்டமாக நூல் வடிவில் கொண்டு வருவதே கருத்தரங்கின் நோக்கமாக இருக்கும்.

திட்ட முன்மொழிவுகள் 5 இல் இருந்து 7 பக்கங்களாக இருக்க வேண்டுமெனவும், எந்தத்துறை சார்ந்தவையாகவும் இருக்கலாம் எனவும் இந்தக்கூட்டத்தில் அருளர் விளக்கினார். புவியியற்துறை தலைவர் பேராசிரியர் இரா.சிவசந்திரனின் தலைமையில் இந்த விளக்கக் கூட்டம் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில், தற்போதைய புனர்வாழ்வு நடவடிக்கைகள் சமுதாயத்தை பின் நோக்கி இழுத்துச் செல்வதை அடிப்படையாகக் கொண்டவையாகவும், எமது பிரதேச அபிலாசைகளுக்கு புறம்பாக,ஒற்றையாட்சியின் அதிகாரத்தைப் பலப்படுத்துவதாக அமைந்துள்ளன சர்வதேச, அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகள் அகதிகள் மேற்குலகுக்கு வராமல் தடுக்கவும், அவர்களை திருப்பி அனுப்பும் வகையில் ஒரு போலியான அமைதிச் சூழ்நிலையை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. எமது தேசத்துவ வேலைததிட்டத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டிய பொறுப்பு எம்மிடமே உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

பேராசிரியர் இரா.சிவசந்திரன், விரிவுரையாளர் பேரின்பநாதன், பொறியியலாளர் தில்லைநாதன் ஆகியோரும் நீண்டகாலத் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி உரையாற்றினார்கள்.

## தென்மராட்சி கிராம அலுவலர்களுக்கான பயிற்சிப்பட்டறை

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர்களுக்கான பயிற்சிப்பட்டறை ஒன்று, நாளையும், எதிர்வரும் 24 ஆம் திகதியும் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெறவுள்ளது.

நாளை சாவகச்சேரி பிரதேச சபை மாநாட்டு மண்டபத்திலும், 24 ஆம் திகதி நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்திலும் காலை 8.30 மணி முதல் மாலை 5 மணிவரை இடம் பெறும். இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்பவர்களுக்கு தேநீர் மற்றும் மதிய உணவும் வழங்கப்படும்.

# இந்துமதத்தைப் பின்பற்றும் அனைவரும் பிதிர் கடன்களைச் சரியாகச் செய்யவேண்டும்

## - பேராசிரியர் கோபால கிருஷ்ண ஐயர் தெரிவிப்பு

மாதா, பிதா ஆகியோரின் இறுதிக் கிரியைகளை புத்திரர்கள் ஒழுங்காகவும், சிரத்தையுடனும், பொறுமையுடனும், தூய மனத்துடனும் நடாத்த வேண்டியது அவர்களது முக்கிய கடமையாகும். எம்மைப் பெற்றுவளர்த்து சகல ஐஸ்வர்யங்களையும் ஏற்படுத்தித் தந்த பெற்றோர்களை மனதிலிருத்தி நன்றி மறவாது செய்யப்படும் காரியம் பிதிர்க் கருமம் எனப்படும். இந்து மதத்தைப் பின்பற்றும் அனைவரும் பிதிர்க் கருமங்களைத் தவறாது செய்யவேண்டும். அதற்கு இந்த அபரக்கிரியைகளின் விளக்க நூல் பெரிதும் துணைபுரியும் என பேராசிரியர் கோபாலகிருஸ்ண ஐயர் தெரிவித்தார்.

அமரர்.காரைநகர் கலாநிதி க.மங்களேஸ்வரக்குருக்களின் ஞாபகார்த்தமாக, மயிலணி சோமஸ்கந்தக்குருக்களால் தொகுக்கப்பட்ட அபரக் கிரியைகள் சில விளக்கங்கள் என்னும் நூல் அண்மையில் நல்லூர் சிவன் கோயில் மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டபோது இதில் தலைமையுரையாற்றிய பேராசிரியர் ப.கோபால கிருஷ்ண ஐயர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் - தாய் தந்தை உயிருடன் இருக்கும்போது, அவர்களுக்கு வேண்டுவன செய்து வழிப்படுதலும், அவர்கள் இறந்தபின் அவர்களைக் குறித்து சிரத்தையோடு ஆற்றப்படும் உத்தரக் (அபரக்) கிரியைகளைச் செய்து வழிபடுதல் புத்திரர்களின் கடமையாகும். அபரக்கிரியைகள் இறந்த ஜீவனது ஆத்மசாந்திக்கும், விடுதலைக்கும் இன்றியமையாதனவாகின்றன. ஒருவருடைய உயிர் பிரியும்போது, அவர் காதில் பஞ்சாட்சர மந்திரமாகிய நமச்சிவாய என்ற மந்திரத்தைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தால் உடலை விட்டுப் பிரிந்து சென்று கொண்டிருக்கின்ற உயிர் யம வேதனையின்றி மோட்சத்தைச் சென்றடையும். பலனில்லாது எவரும் எந்தக் காரியத்தையும் செய்வதில்லை. இந்தப் பிதிர்க் கருமங்களை ஒழுங்காக செய்பவர்களிடத்தலும் முகத்தில் நல்ல தேஜஸ், செல்வம், சந்தான விருத்தி, புகழ், சகல சம்பத்துக்களும் சேரும் என்றார்.

இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் தா.மகாதேவக்குருக்கள் நூலின அறிமுக உரையின்போது-

ஆகமக்கிரியைகள் பற்றி ஏராளமான நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஆனால், வைதிக கிரியைகள் பற்றிய நூல்கள் வெளிவருவது இதுவே முதல் முறையாகும். இந்தக் கிரியைகளை ஆற்றவென கடந்த 15 - 20 வருடங்களுக்கு முன் சீதாராம சாஸ்திரிகள், நாராயண சாஸ்திரிகள் என்போர் எம்மத்தியில் இருந்தனர். ஆனால், அவர்கள் இன்று இல்லாத குறையை இந்த நூல்கள் நிவர்த்தி செய்கின்றன. இறப்பு என்பது எல்லோருக்கும், எந்த மதத்தினருக்கும் பொதுவானதொன்று.

ஆனால், அதன் பின் செய்யப்படும கிரியைகளே மிகவும் அத்தியாவசியமானதாகும். ஏனெனில், பிதிர் சாபம் மிகவும் பொல்லாதது. அதன் மூலம் எமது வாழ்வே சிதைவடைந்து போகும். எனவே அனைவரும் அபரக்கிரியைகளை ஒழுங்காகச் செய்ய இந்த நூல்கள் பெரிதும் உதவும் என்றார்.

காரைநகர் மணிவாசகர் சபைத் தலைவர் பண்டிதர் மு.க.வேலாயுத பிள்ளை சிறப்புரையாற்றும் போது-சமஸ்கிருதத்தில் அல்லாது தமிழ் மொழியில் இந்த நூல் வெளியிடப் பட்டிருப்பதால், எம்போன்ற சாதாரண மக்களும் வாங்கிப் படித்து பல விடயங்களைத் தெரிந்து கொள்ள இந்த நூல் பெரிதும் துணை புரிகிறது. இதுவரை எமக்குத் தெரியாத பல இறுதிக் கிரியைகள் பற்றிய விபரங்களை இந்தப் புத்தகத்திலிருந்து அறிய முடியும் எனத் தெரிவித்தார்

நூலாசிரியர் பிரம்மஸ்ரீ ச.சோமஸ்கந்தக்குருக்கள் ஏற்புரை நிகழ்த்தும் போது - இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன்னர் (1950 - 60களில்) சென்னை மாம்பலத்திலிருந்து ஸ்ரீவத்ச சோமதேவ சர்மா என்பவர் 'வைதீக தர்ம வர்த்தனி' என்னும் மாதாந்த வெளியீட்டில் ஜீவனின் சதாகதி என்னும் தலைப்பின் கீழ் ஜீவன் உடலை விட்டு நீங்கிய பின் சாஸ்திர விதிகளுக்கிணங்க செய்யப்படவேண்டிய கருமங்களை விபரித்து எழுதி வந்தார். இதை வாசித்த போது எல்லோருக்கும் இவை பயன்படவேண்டுமென்ற அவாவினால் எழுந்ததே இந்த நூலின் பிரசுரமாகும்.

ஒவ்வொரு ஜீவராசிகளும் இறப்பது உண்மை. ஆத்மா அல்லது ஜீவனுக்கு அழிவில்லை. ஆத்மா, தான் எடுத்த உடலை விட்டுச் செல்வதையே மரணம் அல்லது இறப்பு எனப்படுகிறது. கடோப நிஷத்தில் நசிகேதனுக்கு யம தர்மராஜன் அளித்த உபதேசங்களில் ஜீவன் உடலை விட்டு நீங்கினும் அழியாமலிருக்கின்றன. இந்த உலகில் தான் செய்த புண்ணிய பாவங்களுக்கேற்ப அதன் பலன்களை அனுபவித்து, மறுபடியும் இந்தப் புவியில பிறவி எடுக்கிறேன் எனச் சொல்லபடுகிறது. மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் தாய், தந்தைக்கு பிதிர் கருமம் செய்வது இன்றியமையாதது. அதை விளக்கத்துடன் அறிந்து செய்வதற்காக இந்த நூல் வெளியிடப் பட்டுள்ளது எனத்தெரிவித்தார்.

(101)

# யாழ்ப்பாண நாட்டிய மரபிலிருந்து மாறுபட்ட நுண்கலைத்துறையின் ஓவிய ஆடல்

**-என்.சுகந்தன்**

யாழ்ப்பாணத்தில் நாட்டிய நிகழ்வு என்றால் அது அரங்கேற்றம். பல்கலைக்கழக நாட்டியத்துறை ஆடல் அல்லது வட இலங்கைச் சங்கீதசபை பரீட்சைக்கான ஆடல்களுமே ஞாபகத்தில் வரும். அதீத அலங்காரங்களும் பழகிப்போன பாடல்களின் உடல் அப்பியாசங்களுமாக இருக்கும். இந்த நடனங்கள் பார்வையாளர்கள் பெரும்பாலும்



நாட்டியக்காரர்களின் உறவினராக அல்லது நண்பராக இருப்பர். எனவே, இவை நாட்டிய நிகழ்ச்சி என்பதிலும் குடும்ப நிகழ்வு அல்லது வகுப்பறை நிகழ்வாகவே அமையும். இதிலிருந்து சற்று மாறுபட்ட நிகழ்ச்சியாக நுண்கலைத்துறையின் (கலைவரலாற்றுத் துறை மாணவர்களால்) ஒருங்கமைப்பில் நிகழ்ந்த ஓவிய ஆடலைக் குறிப்பிடலாம்.

பிரான்சிய நட்புறவுக் கழகத்தில் 13 ஓவியர்களின் ஓவியக் காட்சியை ஒட்டி, துல்லியமாக நிகழ்த்தப்பட்ட ஒரு சோதனை முயற்சியாக இது அமைந்தது. இதில் பங்குபற்றிய மாணவர்களான 4 ஆம் வருட தமிழினி, ஸ்ரீகண்ணன், குமுதா, வசந்தினி ஆகியோர் பல்கலை அன்றி வெளியிலும் கலைப்பயிற்சி பெற்றுத் தேர்ந்துள்ளதால், ஓவியக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட அனுபவங்களின் எதிர்வினையாக தாங்கள் இந்த ஓவிய ஆடலை நிகழ்த்துவதாக கூறினார்கள். அந்த வகையில் ஓவியர்கள் சூழ இருந்த நாற்சார் முற்றத்தில் செறிவான கலைரசனையுடைய பார்வையாளர்கள் மத்தியில் இந்த நிகழ்ச்சி நடந்தேறியது.

ஓவிய ஆடல் நிகழ்ச்சி வழக்கமான சம்பிரதாயங்களுடன் அலாரிப்பு, புஸ்பாஞ்சலி, தில்லானா என்பனவற்றைக் கொண்டிருந்தாலும், வீணை இசையைத் தழுவிய ஜதீஸ்வரமும் காட்சியின் உள்ளடக்கங்களைத் தழுவிய கவிவரிகளையும் கொண்டு நிகழ்த்திய நாட்டிய ஒருங்கமைப்பு உணர்வுகளைத் தட்டிய ஒன்றாக அமைந்தது.

வீணை இசையானது பூபாள ராகத்தில் காலைக்காட்சிகளை ரசிகனுக்கு ஏற்படுத்தி, பின் அவனை அதிலிருந்து தப்பிக்க புஸ்பாஞ்சலி நடனம் பௌளி ராகத்தில்

"உலகெங்கும் உணர்ந்து ஓதுதற்கரியவன்...."

என்று இறைவனைப் புகழ்ந்தும் அதனைத் தொடர்ந்து விநாயகர் கௌத்துவம் தொடர்ச்சியாக வீணை இசை முழங்க, ஜதீஸ்வரத்தை வஸந்தா ராகத்தில் மனதைத் தொடும் வகையில் ஸ்ரீகண்ணன் வசந்தி ஆகியோர் ஆற்றுகை செய்தது நம் மனக்கண்களில் இருந்து இன்னும் அகலவில்லை.

இந்த ஆற்றுகை விரிக்கப்படுமானால், நாட்டியம் பற்றிய சாதகமான நம்பிக்கைகளைத் தரும். எனினும் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய அம்சம் என்னவென்றால், நாட்டியக் கலைஞர்கள் குறித்த ஆற்றுகை வெளியை எதிர் கொண்ட தன்மையேயாகும். நாற்சார் வீட்டில் ஒரு பகுதியைத் தாமும் ஏனைய சாரங்களை பார்வையாளனுக்கு அளித்து, ஆடலை விரிவுபடுத்திய முறைமை அனைவரையும் கவர்ந்த ஒன்று. ரசிகர்கள் அண்மையில் இருக்கிறார்கள் என்ற தன்மையில் நாட்டிய அசைவுகளை நுணுக்கமாகவும் அவர்களைக் குழப்பாது நெருக்கமாக இந்த தன்மை இந்தப் படைப்பின் வெற்றியாகும்.

வழக்கமாக நாட்டியம் என்றால் அலங்கார ஒப்பனைகள் அளவுக்கதிகமாகக் காணப்படும். ஆனால், இங்கு அலங்காரமற்ற நாட்டிய உடல் மொழியை ரசிகர்களுக்குச் சென்றடைய இலகுவாக இருந்தது. தொடர்ந்து கவிவரிகளையும், நட்டுவாங்கத்தையும் தமிழினி செய்ய-வீணையை குமுதா இசைக்க ஆற்றுகை நடத்தப்பட்டது. இதில யாழ். மண்ணின் சோகங்கள், பயங்கள், விழுமியங்களைத் தாங்கியும் பாலியல் வல்லுறவுகள், வரையறையற்ற வன்முறைகளும், மிதிவெடி அபாயங்களும், குடும்ப விரிசல் தன்மையையும் உள்ளடக்கப்பட்டிருந்தது.



ஆரம்பத்தில் மக்கள் இயல்பு வாழ்க்கை வாழ்ந்த விதம் மறந்தது பறவைகள், விலங்குகள் சுதந்திரமாக ஊடாடிய தன்மை என்பனவற்றை ஆற்றுகை செய்தவர்கள் பார்வையாளனை வேதனையின் விளிம்புக்கு அழைத்துச் சென்றனர். அது வேறொன்றும் இல்லை. தமிழ் மக்கள் மனங்களிலிருந்து பிரிக்க முடியாத கிருஷாந்தி படுகொலையே யாகும். போர் மேகம் சூழ்ந்த பொழுதில் கிருஷாந்தி செம்மணி வீதியால் வருவதும், இராணுவ வீரன் அவளுடைய அடையாள அட்டையைப் பார்த்து மிரட்டி, தீயநோக்கில் சிந்தித்ததும் அவள் நடுநடுங்கிப் பின் துணிந் ததும், இறுதிவரை போராடித் தன்னுயிரை மாய்த்ததும் இராணுவம் தன் காமவெறியைக் காட்டியது என்பனவற்றை மிகவும் துல்லியமாக ஓவியவெளியில் நிகழ்த்திச் சென்றார் கள். கிருஷாந்தி கொலை செய்யப்பட்ட பின் செம்மணியில் புதைத்த சம்பவத்தை இவர்கள்

"செம்மணியில் முகம் சிதைந்து
போன எம் கண்மணியின்
திருமேனியெங்கும், அந்நியன் நகம் பதித்து
விருந்தென நினைத்து விசம் - பருகிக் கொண்டான்"

என்ற பாடல் மூலம் ஆற்றுகை செய்தனர். தொடர்ச்சியான இழப்புக்களிலும், துன்பதுயரங்களிலும் மூழ்கிக் கிடந்த மக்கள் சுதந்திர மற்றுப் போன தன்மையை -

"சிதவுறும் காயங்கள் பேசும் மொழியினால்
...பேசவிடுங்கள்"

என்று மனத்தின் படிமங்களை தம் ஆற்றுகையின் வல்லமையினால் வெளிப்படுத்தினர். மேலும் குடும்பங்களுக்கிடையிலான உறவு முறை பிளவுபடுத்தப்பட்ட நிலையில் அண்ணன் ஒருவருக்கு உடன்பிறந்த தங்கை மடல் எழுதும் காட்சியை வெளிப்படுத்தினர். அதாவது -

"நகரில் எல்லாக் கடைகளும் பூட்டப்பட்டாலும்
சவப்பெட்டிக் கடைகள் மட்டும் திறக்கப்பட்டன"

எனும் கவிவரிகள் சாவின் நம்பிக்கைத் தன்மையையும், எந்தக் கணத்திலும் சாவு வரும் என்ற அச்ச உணர்வு என்பன மக்கள் மனங்களில் குடி கொண்டிருப்பதைச் சிறப்புற வெளிப்படுத்தியுள்ளனர். துன்பச்சுமைகள் உந்தப்பட்டு ஒரு பாத்திரம் ஓவிய வெளியில் தன் உணர்வுகளை சொல்ல எண்ணியும், சொல்ல முடியாத நிலையில் அடக்கப்பட்டிருப்பதை தன் மனதோடு சொல்லும் விதம் கவிவரிகள் ஊடாகக் காட்டப்படுகிறது. அதாவது-

"நான் சொல்வேன்
இன்னமும் சொல்வேன்
என் இதயத்தில் இரைச்சல் இல்லை
இன்னமும் சொல்வேன்
இன்னும் என் ஆத்மா இசைக்கிறது"

என்று ஓவிய வெளியில் சென்றதைக் காணமுடிந்தது. இந்தத் துன்பியல் காட்சியில் மூழ்கிக் கிடந்த பார்வையாளனை அவ்வாறு இல்லங்களுக்கு அனுப்பாது, உணர்ச்சி வசப்பட்ட வறிந்தோள இராகத்தில் தில்லானா நிகழ்த்தப்பட்டது. ரசிகர்கள் சோகத்திலருந்து வெளியே வந்தும் நிகழ்ச்சி முடிந்ததே தெரியாமல் தங்களை மறந்து லயித்து இருந்தார்கள். பினனா கொஞ்சம் கொஞ்சமாக கலைந்து சென்றனர்.ஆகவே இன்று யாழ்ப்பாணத்தில் கலைச் செயற்பாடுகள் பற்றிச் சிந்திக்கின்ற போது, கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய ஆற்றுகையாக கலை வரலாற்றுத் துறை முதுசம் 10 நிகழ்ச்சியில் இந்த ஓவிய ஆடல் 31.07.2004 சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடந்தேறியமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*நில்லாத வற்றை நிலையின என்றுஉணரும்*
*புல்லறிவு ஆண்மை கடை* திருக்குறள்

# நமது நோக்கு

## மக்களை ஏமாற்றும் அரசு

எரிபொருட்கள் மற்றும் பல அத்தியாவசியப் பொருட் களுக்கு அரசாங்கம் வழங்கிவரும் மானியத்தை நிறுத் தியதால் - எந்த நேரத்திலும் இவற்றுக்கான விலை உயரும என்று கடந்த வெள்ளிக்கிழமை நடந்த கூட்டமொன்றில் அபாய அறிவிப்பை விடுத்திருந்தார் நிதியமைச்சர்.

அவரது அறிவிப்புகள் செய்திகளாக மக்களைச் சென்றடைவதற்கு முன்னரே - எரிபொருட்கள் விலை உயர்வு பற்றிய செய்தி நாட்டு மக்களைச் சென்றடைந்து விட்டது.

அண்மையில்தான் பெற்றோலுக்கு ஒரேயடியாக 8 ரூபாவை உயர்த்திய அரசு, மீண்டும் 3 ரூபாவால் கடந்த வாரம் அதிகரித்ததுடன். டீசலுக்கு 4 ரூபாவும் அதிகரிக் கப்பட்டது.

இதுதவிர பால்மாவின் விலை 15 ரூபாவால் அதிகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. மண் ணெண்ணையின் விலையும் 12 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளதாகப் பேசப்படுகிறது.

இன்னும் சீனி, கிழங்கு போன்ற பல்வேறு அத்தியா வசியப் பொருட்களும் அடுத்தடுத்த நாட்களில் விலை அதிகரிப்புச் செய்யப்படவுள்ளன.

இவை நேரடியானதென்றால் மறைமுகமாகப் போக்கு வரத்துச் செலவு என்ற ரீதியில் ஒவ்வொரு பொருட்களின விலையும் உயரப் போகிறது.

வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தப் போவதாகக கூறிக்கொண்டு ஆட்சியைப் பிடித்த அரசாங்கம் தனது நூறு நாள் சாதனையாகச் செய்துமுடித்திருப்பது விலைவாசியை உயர்த்தி - நாட்டு மக்களின் வயிற்றில் அடித்ததுதான்.

சாதாரண, அடிப்படை வசதிகளற்ற மக்களின் நலனில் அக்கறை கொண்டதாகக் காட்டிக்கொண்ட ஜே.வி.பியினரும் அரசாங்கத்துடன் இணைந்து - சாதாரண மக்களை நன்கு ஏமாற்றி விட்டனர்.

கடந்த காலத்தில் விலைவாசி உயர்வு கட்டுக்குள் இருக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால், அது ஏதோ ஓரிரு ரூபா அதிகரிப்பாவே இடம்பெற்றுக் கொண்டிருந்தது. ஆனால், இப்போதைய அரசுதான் முன்னெப்போதும் இருந்த அரசுகளும் செய்யாத வகையில் ஒரேயடியாக எட்டு, பத்து, பதினைந்து ரூபா என்று பொருட்களுக்கான விலையை உயர்த்தி சாதனை படைத்திருக்கிறது.

புதிய அரசின் அமைச்சர்கள் கொடுத்த வாக்குறுதிகள் எல்லாமே காற்றில் பறந்து போய் விட்டன . ஜே.வி.பியும் கூட சாதாரண மக்களுக்காக நீலிக கண்ணீர் வடித்து நன்றாக ஏமாற்றிவிட்டது.

ஒரே அரசாங்கத்தில் இருந்து கொண்டே இப்போது ஜே.வி.பி விலைவாசி உயர்வுக்கு நியாயம் கற்பிப்பதாக நடந்து கொள்வது அதன் அரசியல் பச்சோந்தித் தனத்தையே வெளிப்படுத்தியிருக்கிறது.

விலைவாசி உயர்வுக்கு அரசுக்கு ஆதரவு கொடுக் கமாட்டோம் என்று கோசம் போட்டு ஆட்சிக்கு வந்த ஜே.வி.பி இப்போது - விலைவாசி அதிகரிப்புக்குப் பின்னர் - சாத்தான் வேதம் ஓதுவதுபோல நடந்து கொண்டிருக்கிறது.

அரசாங்கம் விலைவாசிகளை அதிகரித்துவிட்டதாகவும், இதற்குப் பதிலாக மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்கவேண்டும் என்றும் அதன் அமைச்சர் ஒருவர் கூறியிருக்கிறார்.

நிவாரணம் என்ற பெயரில் நாட்டு மக்களை இலகுவாக ஏமாற்றிவிடலாம் என்று அரசியல்வாதிகள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். இதனால்தான் ஜே.வி.பி அமைச்சர்கள் நாட்டு மக்களை அடி முட்டா ளாகக் கருதி இப்படியொரு கருத்தை வெளியிட்டிருக் கிறார்கள்.

பொருட்களின் விலைகளை ஏற்றிவிட்டு நிவாரணம் வழங்குவதைவிட, பொருட்களின் விலையை அதிகரிக் காமல், மக்களுக்கு சுமைகளைச் சுமத்தாமல் இருந் திருக்கலாமே.


சர்வதேச சந்தை விலையுயர்வு, நாணயப் பெறுமதி வீழ்ச்சி என்று நாட்டுமக்களை ஏய்ப்பதற்காக ஒவ்வொரு காரணங்களைக் கூறிக்கொண்டிருக்கும் அரசாங்கத்தால நீண்டகாலத்துக்கு இத்தகைய பொய்களை நம்ப வைக்க முடியாது.

இப்போது விலைவாசி உயர்வினால் சாதாரண மக்களே அதிகம் பாதிப்பை எதிர்நோக்கியிருக்கின்றனர். இப்படி ஒருபுறம் நாட்டு மக்களின் வயிற்றிலடித்துக் கொண்டு, ஏராளமானோருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்போவதாகப் பிரசாரம் செய்து கொண்டிருக் கிறது அரசு.

இத்தகைய பொய்களும், பிரசாரங்களும் அரசாங் கத்தை நீண்ட நாட்களுக்கு காப்பாற்றாது என்பது மட்டும் உண்மை.

# நாடும் நடப்பும்

செய்தி:-
ஹெல உறுமயவினர் தொடர்ந்தும் இன வெறியை கிளறும் நடவடிக்கைகளிலேயே ஈடுபடுவதன் மூலம் அரசியல் ஆதாயம் அடையப்பார்க்கின்றனர்.



# மருதடி ஆலய மீள்கட்டுமானப் பணிகளுக்கு பிரதேச சபையிடம் அனுமதி பெறவில்லை

## தர்மகர்த்தாவுக்கு பிரதேச சபை செயலரால் கடிதம்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய கட்டடப்பணிகள் அனுமதிபெறாது மேற்கொள்ளப்படுவதால், புனரமைப்புப் பணி கள் இடைநிறுத்தப்படலாமெனத் தெரியவருகிறது.

மீள் கட்டுமானப் பணிகளுக்கு முன் அனுமதியை மானிப் பாய் பிரதேச சபையிடம் பெறவேண்டும். அனுமதி பெறாது வேலைகள் இடம்பெறுவதால், இதனை அனுமதிக்க முடியா தெனத் தெரிவித்து, பிரதேச சபை செயலாளர் பி. விக்டரினால் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் சிதம்பரநடராஜாவுக்கு கடித மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான பிரதான வீதிக்கு அருகில் இந்தக் கோயில் அமைவதால், வீதி அபி விருத்தி அதிகாரசபையிடமும் அனுமதி பெறப்படவேண்டும்.

அனுமதிகள் பெறப்படாத பட்சத்தில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள மானிப்பாய் பிரதேச சபை அனுமதி வழங்காதென வும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன், பிராந்திய உள்ளூராட்சி உதவியாளர் க.இராசையா, பிரதேச செயலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை பிராந்திய பொறியியலாளர் ஆகியோருக்கும் இந்தக்கடிதத்தின் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (91)

## கவனிப்பாரின்றி சிதைவடையும் யாழ் . திறந்த வெளி அரங்கு

யாழ்ப்பாணம் திறந்த வெளி அரங்கம் கவனிப்பாரின்றிச் சிதைவடைந்து போவதால் பொதுமக்கள் பெரும் கவலை தெரிவித்துள்ளனர்.

நான்காவது உலகத் தமிழ் ஆராச்சி மகாநாடு நடைபெற்ற இந்த முற்றவெளிப்பகுதியானது 1991 ஆம் ஆண்டு காலப்பகுதியில் துப்பரவு செய்யப்பட்டு நிகழ்வுகள் பல நடத்தப்பட்டது.

எனினும் 1995 ஆம் ஆண்டு யாழ்மாவட்டத்தில் இடம்பெற்ற பெரும் இடப்பெயர்வின் பின்னர் அந்தப் பகுதி கைவிடப்பட்டது. இன்றுவரை அதனை எவரும் திருத்தவோ அங்கு நிகழ்வுகளை நடத்தவோ எதுவித முயற்சியும் எடுக்கவில்லை.

இதனால் அங்கு பற்றைகள் வளர்ந்து பெரும் அலங்கோலமான நிலையில் அரங்கப் பகுதி காணப்படுகிறது.

அந்தப் பகுதியைப் புனரமைத்து அங்குள்ள கலையரங்கை மீண்டும் இயங்கச் செய்ய உரியதரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (64)

## மட்டக்களப்பில் படையினரின் சோதனை நடவடிக்கை தீவிரம்

மட்டக்களப்பில் இராணுவத்தினரினதும், அதிரடிப்படையினரினதும் சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.ஜெயானந்தமூர்த்தி கருத்துத் தெருவிக்கையில் -

மட்டக்களப்பு மாவட்டத்தில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறுவது உண்மைதான். அதுவும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப்பாட்டில் உள்ள பகுதியில்தான் இடம்பெறுகின்றன.

தற்பொழுது பயங்கரவாதத் தடைச்சட்டம் தற்காலிகமாக நீக்கப்பட்டிருப்பதால், சோதனை நடவடிக்கைகள் பொலிஸாரிட்தான் இருக்க வேண்டும். ஆனால், இங்கு கூடியளவு இராணுவத்தினரும், விசேட அதிரடிப்படையினரும்தான் சோதனை நடவடிக்கையில் ஈடபட்டுள்ளார்கள். இதனால் பொதுமக்கள் மத்தியில் அச்சமும், பீதியும் ஏற்பட்டுள்ளது.

வாகனங்களில் செல்லும் பயணிகள் இறக்கப்பட்டு சோதனையிடப்படுவதோடு, பெண்களை ஆண் இராணுவத்தினரே சோதனையிடுகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## குறிகாட்டுவான் துறைமுக வாயிலில் வாகன சோதனைகளை படையினர் தீவிரப்படுத்தினர்

(நெடுந்தீவு)

குறிகாட்டுவான் துறைமுக நுழைவாயிலில் கடற்படையினர் கட்டுப்பாட்டு கதவு ஒன்றை அமைத்து, அதில் வாகனங்களை நிறுத்தி விசாரித்த பின்னரே, துறைமுகப்பகுதிக்கு நுழைய விடும் நடவடிக்கை கடந்த சில நாட்களாக தொடர்கின்றது.

ஏற்கனவே, அந்தப் பகுதியில் காவலரண் ஒன்றும், இந்தக் கட்டுப்பாட்டுக் கதவும் அமைக்கப்பட்டதோடும், அவற்றினால் பயணிகளுக்கு எந்த இடர்களும் ஏற்படவில்லை என்பதுடன், தற்போது இதிலே புதிதாக ஒரு நடைமுறையை ஏற்படுத் திருப்பது பயணிகள் மத்தியில் பெரும் விசனத்தை உண்டு பண்ணியுள்ளது.

இதேவேளை துறைமுகப் பகுதியில் பயணிகளை, பரி சோதனைக்கு ஒழுங்காக நிறுத்தி வைக்கவென கம்பியிலான ஒடுங்கியபாதை புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இதனூடாக தங்கள் பயணச் சுமைகளுடன் சென்று, வருவதில் மிகவும் சிரமங்களை பயணிகள் எதிர்கொண்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (113)

## சம்பள உயர்வு கோரி கொட்டகலையில் பேரணி

பெருந்தோட்டத்துறையில் தொழிலாளர்களுக்கு உரிய வேதன உயர்வுகள் வழங்கப்பட வேண்டும் எனக் கோரி, கொட் டகலையில் இன்று முற்பகல் 11 மணியளவில் ஆர்ப்பாட்ட பேரணியொன்று நடைபெறவுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்கான ஒன்றியத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்தப் பேரணியில் -

தொழிலாளர் வேதன உயர்வு உட்பட்ட பல கோரிக்கை கள் வலியுறுத்தப்படவுள்ளன.

தொழிலாளர் வேதன உயர்வு தொடர்பில் தொழிலாளரின் ஒப்புதல் பெறப்படவேண்டும்.

பெருந்தோட்டங்களை மீண்டும் அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும். அரசாங்க ஊழியர்களுக்கு வேதன உயர்வு வழங் கப்படும்போது, தோட்டத் தொழிலாளர்களுக்கு வேதன உயர் வும் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். இந்த விடயத்தில் ஜனாதிபதி தலையிடவேண்டும். இனப்பாகுபாட்டை ஒழித்து சமா தானத்தை கட்டியெழுப்ப அரசாங்கம் முன்வரவேண்டும் போன்ற கோரிக்கைகள் இந்தப் பேரணியில் முன்வைக்கப்படவுள்ளது.

# குறிகாட்டுவான் பிரதான வீதியிலுள்ள கடற்படை முகாம் பலப்படுத்தப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் இருந்து குறிகாட்டுவான் செல்லும் பிரதான வீதியை அண்டிய பகுதியிலுள்ள கடற்படை முகாம்கள் அனைத்தும் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

[illegible], புங்குடுதீவு, குறி காட்டுவான் பகுதியில் உள்ள காவலரண்கள் புனரமைக் கப்படுகிறது. முகாமைச்சுற்றி பாரிய இயந்திரங்களைக் கொண்டு பெரும் மண் அணைகளும் அமைக்கப்பட்டு வருகின்றதுடன், பதுங்கு குழிகளும் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை யாழ். பண்ணைப் பாலப் பகுதியில் கடற் படையினரது பாதுகாப்பில் உள்ள வீதியின் இரு மருங்கிலும் உள்ள முட்கம்பிவேலிகளும் புனரமைக்கப்படுகிறது. (113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- யாழவன் -

வாரநோக்கு

# வலுவடையும் உள்வீட்டுப் பிரச்சினைகள் உள்நாட்டுப் பிரச்சினைக்கு தீர்வாகுமா?



ஆளும் கூட்டமைப்பின் தலைமைப் பதவியை ஜனாதிபதி இராஜினாமாச் செய்தார். அரசுடன் இணைவது தொடர்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்குள்ளே கருத்து முரண்பாடு - முன்னர் கொள்ளையடித்த தலைவர்கள் தொடர்பாக கேள்வி எழுப்புகின்றனர் ஜே.வி.பியின் இளமட்டத் தலைவர்கள்- அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக சுதந்திர கட்சியிடையே கருத்து முரண்பாடுகள் வலுவடைகின்றன என்பவை கடந்த சில நாட்களாக செய்தியூடகங்களை ஆக்கிரமித்த முக்கியமான செய்தித் தலைப்புக்களாகும்.

இந்தச் செய்திகள் அனைத்தும் வெவ்வேறு கட்சிகளுடைய பிரச்சினைகளாக இருந்தாலும், இவற்றுக்கிடையே ஒரு பொதுவான ஒற்றுமையை, காணக்கூடியதாக உள்ளது. அதாவது- இலங்கை அரசியலிலே தற்போது கணிசமாக அனைத்துக் கட்சிகளுக்குள்ளேயும் உள்வீட்டுப் பிரச்சினைகள் வலுப்பெற்றுள்ளமையே இந்த ஒற்றுமையாகும்.

இந்தப் பிரச்சினைகளுள் அனேகமானவை எவையும் நாட்டுமக்களினதோ அல்லது குறித்த கட்சிகளின் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுடைய நலன்கள் சார்ந்ததாக இல்லையென்பது மனம் வருந்தத்தக்க விடயமாகும். இவை தனிப்பட்டவர்களின் அரசியல் நலன்களுக்காகவும், பொருளாதார மேம்பாடுகளுக்காகவும் தோன்றியுள்ள பிரச்சினைகளேயாகும். சுயலாப அரசியல் மேலோங்கியுள்ளமையே இலங்கையின் இன்றைய அவல நிலைக்குக் காரணமாகியுள்ளது. அவ்வேளை தொடர்ந்தும் சுயலாப அரசியல் வலுப்பெறுவதென்பது ஜீரணிக்கக் கூடிய ஒரு விடயமல்ல.

ஆளும் கூட்டமைப்பிலே அங்கத்துவம் பெறும் பங்காளிக்கட்சிகளான ஜே.வி.பி - சுதந்திரக்கட்சிகளிடையேயான முறுகல் மேலும் வலுவடைந்து வருகின்றது. நாட்டு நலனிலே சிறிதும் அக்கறையில்லாத ஜே.வி.பியினர் தொடர்ந்தும் குழப்பவாதிகளாகவே கூத்தாடி வருகின்றனர்.

விடுதலைப்புலிகளுடைய சமாதானச் செயல



கத்துக்கு நான்கு வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு அரசு தீர்வைச் சலுகை வழங்கியுள்ளமையை, ஜே.வி.பி வன்மையாகக் கண்டித்து, பூதாகரமாக்கி தமது அரசியல் நலன்களைத் தீர்த்துக்கொள்ள முனைகின்றது. சாதாரணமாக ஓடித்தேயும் வாகனங்களையே சலுகையடிப்படையில் வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஜே.வி.பி எப்படி இடைக்கால நிர்வாகத்தை உரிமை அடிப்படையில் வழங்குவதற்கு உடன்படும்? என்பதே இன்று சிந்திக்கத் தெரிந்தோர் மத்தியில் எழுந்துள்ள வினாவாகும்.

வாகனக் கொள்வனவு எனும் சாதாரண விடயத்தை சிங்கள மக்கள் மத்தியிலே அரசு- புலிகளுக்கு ஆயுதக் கொள்வனவு செய்ய வழி செய்து கொடுப்பதுபோல, பிரசாரப்படுத்தி மேலும் மேலும் பிரதிகூலமான விளைவுகளையே ஜே.வி.பி தோற்றுவித்துக் கொண்டுள்ளது. இதன் மூலம் தான் இணைந்துள்ள கூட்டுக்கே ஆப்புவைக்க எண்ணுகிறது ஜே.வி.பி.

இந்த விடயங்கள் மூலமாக சுதந்திரகட்சி- ஜே.வி.பி இடையே ஏற்பட்டுள்ள முறுகல் நிலையானது மேலும் தீவிரமடைகிறது. இதன் விளைவாகத் தோன்றும் அதிருப்தியானது நாடாளுமன்றக் கலைப்புக்கோ அல்லது ஆட்சிக்கவிழ்ப்புக்கோ வழிசமைத்துவிடலாம். அதனைக் காட்டிலும் மீண்டும் ஓர் அபாயகரமான, அழிவுகரமான போர் ஏற்படவும் வழிசெய்து விடலாம். எது எவ்வாறு இருப்பினும் ஜே.வி.பியின் நகர்வுகள் நாட்டை அபாயநிலைக்கே கொண்டு செல்கின்றன என்பதே உண்மையாகும்.

இந்த நிலையில் ஜே.வி.பி இடையேயும் உள்வீட்டுப் பிணக்குகள் தோன்ற ஆரம்பித்துவிட்டன. இதுவரைகாலமும் தமக்குள்ளே ஒழுங்கமைப்பு ஒன்றைப் பேணிவந்த ஜே.வி.பியினர் தமது அரசியலை, தேர்தலை அடிப்படையாகக் கொண்டு விஸ்தரித்த போது அங்கத்தவர் எண்ணிக்கையையும் அதிரித்துக் கொண்டது. நடந்து முடிந்த மாகாண



சபைத் தேர்தல்கள் மூலமாக ஜே.வி.பியினுள் முழுமையாக உள்வாங்கப்பட்ட இளந்தலைமுறைத் தலைவர்கள் தற்போது ஜே.வி.பி தலைமையை கேள்வி மேல் கேள்வி கேட்கத் தொடங்கிவிட்டனர். இதனால் மீண்டும் ஜே.வி.பி லண்டனுக்குத் தப்பிச் செல்லத் திட்டமிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜே.வி.பியின் தலைவராக முன்னர் ரோகண விஜயவீர இருந்தபோது, கொள்ளையடிக்கப்பட்ட தங்கங்கள் தற்போது எங்கேயுள்ளன? அவற்றுக்கு என்னவாயிற்று? என்பதே ஜே.வி.பியின் இளையதலைவர்கள் இன்று எழுப்பியுள்ள கேள்வியாகும். மாகாணசபைத் தேர்தல்களிலே வெற்றிபெற்ற இந்த இளைய தலைவர்கள் தமக்கு அமைச்சுப்பொறுப்புக்கள் கிடைக்குமென ஆசையோடு எதிர்பார்த்திருந்தனர். ஆனால், ஜே.வி.பி யின் அரசியல் "கௌரவம்" காரணமாக அது மாகாண சபையிலே அதிகளவான அமைச்சுப் பொறுப்புக்களை பெற்றுக்கொள்ளவில்லை. இதனால் ஏமாற்றமடைந்த ஜே.வி.பியினரே தமது அதிருப்தியை இன்று தலைமை மீது காட்டி வருகின்றனர். இவர்களுக்குப் பின்னால் சில மூத்த ஜே.வி.பி தலைவர்கள் தூண்டிகளாக செயற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு ஜே.வி.பிக்கிடையேயும் இன்று உட்பூசல்கள் வலுவடையத் தொடங்கிவிட்டன.

இதைவிட மற்றொரு ஆட்சிப்பங்காளியான சுதந்திரக் கட்சியிடையேயும் பதவிகள் தொடர்பாக இன்று பனிப்போர்கள் தொடங்கிவிட்டன. இன்னும் இரு வருடங்களில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் பதவியைக் குறிவைத்துள்ள தலைவர்கள் இடையே பனிப்போர் ஆரம்பித்துள்ளது. அதிலும் ஜனாதிபதியின் அன்புத் தம்பியான அமைச்சர் அனுராபண்டாரநாயக்க பரம்பரை அரசியலை காரணம்காட்டி, அடுத்த ஜனாதிபதியாகும் தகுதி தனக்கே உள்ளதாக சுயபுராணம் பாடிவருகிறார். இதனால் கடுப்புற்றுள்ள சில சுதந்திரக்கட்சியிலுள்ள மூத்த அரசியல்வாதிகள் தற்போதே செயலில் இறங்கிவிட்டனர். தமக்காக அரசியல் ஆதரவை நாட்டு மக்களிடையே அதிகரிப்பதைக்காட்டிலும், தமது கட்சி அங்கத்தவர்களிடையே அதிகரிப்பதிலேயே குறியாகவுள்ளனர்.

பிரதமர் பதவியிலே ஆரம்பித்த சுதந்திரக்கட்சித் தலைவர்களிடையேயான முதுகுக்குப் பின்னான போரானது ஜனாதிபதி பதவிக்காக இன்று வலுவடைந்து வருகிறது. இரு தடவைகள் ஜனாதிபதியாக சந்திரிகா பதவி வகித்தமையால், மீண்டும் தேர்தலில் நிற்க முடியாத நிலையே இப்பனிப்போருக்கு வழிசெய்துள்ளது. ஆனாலும், ஜனாதிபதி தனது பதவிக்காலம் முடிவதற்கு இடையே ஜனாதிபதி பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு, மீண்டும் தேர்தலிலே நிற்க முடியுமா? அதற்கு நாட்டின் அரசியலமைப்பு இடம்கொடுக்குமா? என்ற ஆராய்ச்சியிலும் ஜனாதிபதி தரப்பு ஈடுபட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது இவ்வாறு இருக்க, தொங்கு நிலை ஆட்சியை அமைத்துக் கொண்டு தமது ஆட்சியின் ஆயுளை எண்ணிவரும் தற்போதைய அரசுக்கு முண்டு கொடுக்க இலங்கைத் தொழிலாளர் கட்சியானது முன்வந்துள்ளது. அக்கட்சியைச் சார்ந்த சில தலைவர்களுக்கு உடன்பாடில்லாத விடயமாகவுள்ளது. இது தமது கட்சியின் தனித்துவத்தை பாதிப்பதோடு மலையக மக்கள் மத்தியிலே தமது செல்வாக்கை குறைத்து, தப்பபிப்பிராயம் ஒன்றை ஏற்படுத்திவிடலாமெனவும் இவர்கள் எண்ணுகிறார்கள்.

போர்முனைப்புக் கொண்ட சமாதான நகர்வுகளைக் கொண்டு செல்வதைக் காட்டிலும், ஆயுதக் கொள்வனவிலேயே அதிக அக்கறையைக் காட்டி வரும் அரசு, கவிழ்ந்து விடாமல் இருப்பதற்கு வெறும் அமைச்சுப் பதவிக்காக ஆசைப்பட்டு, தாம் முண்டு கொடுப்பது தமது கட்சியின் நலனுக்கு ஆபத்தாக அமைந்துவிடக்கூடுமென இவர்களுள் சிலர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமைக்கு ஆலோசனை கூறிவருகின்றனர்.

ஆனால், அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்று அதன் மூலமாக மலையக மக்களுக்கு சேவையாற்றவுள்ளதாக கதைவிடும் ஆறுமுகம் தொண்டமான், அப்பாவி மலையக மக்களை அடகு வைக்கப் போகிறார் என்பதை மலையக மக்கள் பலர் உணரவில்லை. இன்றுவரை நிரந்தர பிரஜாவுரிமை அற்ற வந்தேறு குடிகளாக நான்கு ஐந்து தலைமுறைகளையும் தாண்டி, மலையக மண்ணிலே வசித்துவரும் தோட்டத் தொழிலாளர் நலன்களுக்கெதிராக குரல் கொடுக்க வேண்டியதொரு தலைவர் இன்று இனவாத, மதவாத போக்குடைய அரசொன்றுக்கு முண்டுகொடுக்க முனைவது ஏற்றுக்கொள்ளத்தக்க விடயமல்ல. இதனால், சில இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்கள் கொதிப்படைந்துள்ளமை நியாயமானதேயாகும். இதன் மூலமாகத் தோன்றியுள்ள உள்வீட்டுப் பிரச்சினை எதுவரை நீடிக்கும் என்பது ஆருடமற்ற விடயமாகும்.

இது இவ்வாறு இருக்க இலங்கை முஸ்



லீம் காங்கிரஸினுள்ளும் குத்து வெட்டுக்கள் இன்னும் ஓய்ந்தபாடாகவில்லை. இலங்கையின் மூன்றாம் நிலையிலுள்ள இனத்தவராகிய முஸ்லீம்கள் இன்று மூன்றுக்கும் மேற்பட்ட தலைமைகளுக்குக் கீழே செயற்பட்டு வருகின்றனர். முஸ்லீம் காங்கிரஸினுடைய தலைவராகவுள்ள ரவூப்ஹக்கீமும் முஸ்லீம் மக்களை ஐக்கிய தேசியக் கட்சியிடம் அடகு வைத்துவிட்டதாக ஒரு குற்றச்சாட்டு எழுந்து வருகிறது. இதனால், விளைந்த கருத்து வேறுபாடுகள் புதிய முஸ்லீம் கட்சிகளுக்கு வழி செய்துள்ளது.

ஒன்றுபட்டு நிற்க வேண்டிய தருணத்திலே ஒற்றுமையிழந்து, சிதறுண்டுபோயுள்ள முஸ்லீம் மக்கள் தமது உள்வீட்டுப் பிரச்சினைகளைச் சீர்ப்படுத்த வேண்டிய காலத்தில், கட்டாயத்திலேயுள்ளனர். பேரினவாத, பெரும்பான்மையினக் கட்சிகளுடைய அரசியல் நலன்களுக்காக சிறுபான்மை இன மக்களாகிய முஸ்லீம்களையும், மலையக மக்களையும் பலியாக்கும் செயலை அனுமதிக்க முடியாது.

தமிழர் தரப்பிலே அவ்வப்போது உள்வீட்டுப் பிரச்சினைகள் தலைதூக் கினாலும், ஒன்றுபட்ட தலைமைத்துவத்தின் ஆளுமை காரணமாக அவை உடனேயே தீர்க்கப்பட்டு விடுகின்றன. கருணாவினுடைய விவகாரமானது தலைதூக்கியபோது, பலரும் தமிழர்களுடைய பலம் சிதைந்து விடப் போவதாக அறிக்கைவிட்டார்கள். ஆனால், தங்களுடைய கருத்துக்களை கனவாக்கும் வகையிலே சமயோசிதமான தனது நகர்தல்களின் மூலமாக தமிழ்த்தலைமை தமிழின ஒற்றுமையை



மேலும் வலுவூட்டச் செய்தது.

இவ்வாறு தொடர்ந்துவரும் இலங்கையின் உள்வீட்டுப் பிரச்சினைகள், தொடரும் உள்நாட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வாகுமா என்பதே இன்றுள்ள வினாவாகும். அரசை நிலைக்கச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இ.தொ.கா சமாதான நகர்வுகள் வலுவடைவதற்கான அழுத்தத்தை அரசுக்கு வழங்குமா? பதவிக்காகப் போட்டிபோடும் தலைவர்கள் நாட்டு நலனை கருத்திற்கொண்டு செயற்படுவார்களா? என்பதைப் பொறுத்தே பார்க்க வேண்டும்.

இந்த நிலையில் பெரியளவான ஆயுதக் கொள்வனவைச் செய்யும் நடவடிக்கையிலே இலங்கை அரசு - சீனாவுடன் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன்போது நவீனரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் இலங்கை அரசு, எவ்வாறு சமாதானத்தை நகர்த்தப்போகிறது? இல்லாவிடில் மீண்டு மோர் சமாதானத்துக்கான யுத்தத்தை ஆரம்பிக்கப் போகிறதா....?

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நமது ஈழநாடு

## இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் கலை, இலக்கிய - போட்டிகள்

நமது ஈழநாடு பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி கலை - இலக்கியப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

### போட்டிக்கான விதிகள்

### சிறுகதை மற்றும் கவிதைப் போட்டி

- படைப்புக்கள் யாவும் படைப்பாளியின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும் - மொழிபெயர்ப்புக்கள் நிராகரிக்கப்படும்.
- சிறுகதைகள் யாவும் தெளிவான எழுத்திலோ, தட்டச்சு செய்யப்பட்டோ இருத்தல் வேண்டும். கையெழுத்தில் 7 பக்கங்களுக்குள்ளும் - தட்டச்சில் 5 பக்கங்களுக்குள்ளும் இருப்பது அவசியம்.
- கவிதைகள் மரபுக்கவிதையாகவோ அல்லது புதுக்கவிதையாகவோ இருக்கலாம். எதுவானாலும் 20 முதல் 30 வரிகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்கள் யாவும் சமகால சமூகவியல் - வாழ்வியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.
- ஆக்கங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

### புகைப்படப் போட்டி

- புகைப்படத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் தொழில் சார் கலைஞர்கள் எவரும் இதில் பங்குபற்றலாம் - வயது வேறுபாடில்லை.
- போட்டிக்கு அனுப்பப்படும் படங்கள் கறுப்பு வெள்ளைப் படங்களாகவும் இருக்கலாம். வண்ணப்படங்களாகவும் இருக்கலாம். அளவு 6 CM X 4 CM ஆக இருத்தல் அவசியம்.
- புகைப்படங்கள் - எமது மண்ணின் இயற்கையழகு எமது மண்ணின் பாரம்பரியம், சமகால வரவாற்றுப் பதிவுகள் ஆகியவற்றைப் பதிவு செய்ததாக இருக்கவேண்டும்.
- ஒருவர் மூன்று படங்கள் வரை அனுப்ப முடியும். ஆனால் ஒரு படத்துக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்.
- புகைப்படங்களுடன் பெயர் விலாசம் போன்றவை தனியாக இணைக்கப்படல் வேண்டும்.
- அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

### கையெழுத்து சஞ்சிகை உருவாக்கல் போட்டி

*நிபந்தனைகள்*

இந்தப் போட்டி இரண்டு பிரிவுகளாக நடத்தப்படும்.

1. பாடசாலை மாணவர்களுக்கானது.
2. தனிநபர் - தனியார் அமைப்புக்களுக்கானது

பாடசாலை மாணவர்களுக்கான போட்டி மத்திய பிரிவு - மேற்பிரிவு என இரு பகுதிகளாக நடத்தப்படும்.

**மத்திய பிரிவு-** க.பொ.த (சாதாரண) தரத்திற்கு உட்பட்டவர்களுக்குரியது.

**மேற்பிரிவு -** அதற்கு மேற்பட்டவர்களுக்குரியது.

- போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் சஞ்சிகைகள் மாணவர்களின் சுய படைப்பாற்றல் மற்றும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துபவையாக இருக்க வேண்டும்.
- சஞ்சிகைகள் 40 முதல் 50 பக்கங்கள் வரையுள்ளதாகவும் ஒரு அழகான கலைத்துவமான சஞ்சிகைக்குரிய தரமான வடிவமைப்புக் கொண்டதாகவும் தெளிவான கையெழுத்துக்களில் எழுதப்பட்டவையாகவும் இருத்தல் வேண்டும்.
- தனிநபர்கள் - தனியார் அமைப்புகள் ( இலக்கிய வட்டங்கள் - சனசமூகநிலையங்கள்) அனுப்பிவைக்கும் சஞ்சிகைகளும் மேற்குறிப்பிட்ட விதிகளை அனுசரிக்க வேண்டும்.
- மாணவர்கள் தங்களின் சஞ்சிகை தயாரிப்பில் தமது ஆசிரியர்களின் ஆலோசனைகளை நாடமுடியும்.
- மிகத் தரமானதெனத் தேர்தெடுக்கப்படும் - சஞ்சிகைகளுக்குரிய சகல அம்சங்களையும் உள்ளடக்கிய ஆக்கங்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படும்.
- சஞ்சிகைகள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 15.09.2004
- பதிவுத்தாபாலில் அனுப்புதல் பாதுகாப்பானது - நேரிலும் கையளிக்கலாம்.
- பாடசாலை மாணவர்களின் சஞ்சிகைகள் பாடசாலை வகுப்பாசிரியர் அல்லது அதிபரால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

**குறிப்பு:-** இப்போட்டிகளில் நமது ஈழநாடு நிறுவன ஊழியர்கள் எவரும் பங்குபற்ற முடியாது.

போட்டிக்கான ஆக்கங்கள்
அனுப்ப வேண்டிய முகவரி:- நமது ஈழநாடு -
267. நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# ஆப்கானில் நடந்த மோதலில் 21 பேர் கொல்லப்பட்டனர்!

(காபூல்)

ஆப்கானின் மேற்குப்பகுதியில் அமைந்துள்ள ஹேரத் மாகாணத்தில் இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகளுக்கும், மாகாண ஆளுநருக்கு ஆதரவான படைகளுக்குமிடையில் நடந்த மோதலில் 21 பேர் கொல்லப்பட்டனர்.

இஸ்லாமியக் கிளர்ச்சிவாதிகளின் தலைவர் அமானுல்லா கான் தெரிவிக்கையில் - தனது படைகள் ஹேரத் மாகாணத்திலுள்ள சின்தாத் மாவட்டத்தைக் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவித்தார்.

அத்துடன் தனது படைகள் தாக்கியதில் ஆளுநரின் ஆதரவுப்படைகள் 14 பேர் கொல்லப்பட்டதுடன், 20 பேரைப் பிடித்து வைத்துள்ளதாகவும் தமது தரப்பில் 7 பேர் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்தார்.

ஆனாலும், அமானுல்லா கான் தெரிவித்தது போல அவர்களின் படைகள் சின்தாத் மாவட்டத்தைக் கைப்பற்றவில்லையென ஆளுநரின் பேச்சாளர் மறுத்தார்.

இந்தத் தாக்குதலை ஆப்கான் ஜனாதிபதி கடுமையாகக் கண்டித்ததுடன், இது எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை குழப்பும் நடவடிக்கை எனவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அத்துடன் கிளர்ச்சிவாதிகளுக்கெதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் எச்சரித்தார்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஆப்கான் பாதுகாப்பு அமைச்சர் -

இந்தத் தாக்குதலை ஆளுநர் கானின் படைகளே கையாளுமெனத் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்

## திருமதி இராமசாமி சண்முகவடிவு

**(சாவகச்சேரி)**

மகளிர் கல்லூரி வீதியை சொந்த இடமாகவும் - டச்சு வீதி, சேச் லேனை வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி சண்முகவடிவு நேற்று (15.08.2004) காலமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (16.08.2004) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3 மணிக்கு பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு றோட்,
சேச் லேன், சாவகச்சேரி. (இ)

*தகவல்*
குடும்பத்தினர்


# நடமாடும் சேவை வாரம்

இலவச

metropolitan

திங்கள் 16 ஆம் திகதி முதல் வெள்ளி
20 ஆம் திகதி வரை

உங்களை வரவேற்கிறது
வாருங்கள்....

இல.200 ,காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(அல்லது)
அழையுங்கள்....




(021)222 5461, 5462 (பிரத்தியேக சேவைத் தொடர்பு)

இலவச தொழில்நுட்பக் கவனிப்பும் சேவையும் சகல மெற்றொபொலிட்டன்
உபகரணங்களுக்கும் வழங்கப்படும்

Canon கொப்பியர், Canon பக்ஸ் இயந்திரம், Superfax
டுப்ளிகேட்டர்ஸ் மற்றும் இதர....

நன்றி.

NAVAKALA

நவகலா,
200, K.K.S.வீதி,
யாழ்ப்பாணம்.
021 - 222 2561
021 - 222 5462



# மாபெரும் விவசாய கண்காட்சி

- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
- கால்நடை உற்பத்தி திணைக்களம்
- விவசாய திணைக்களம்
- கைத்தொழில் திணைக்களம்

என்பன இணைந்து நடாத்தும் மாபெரும் விவசாய கண்காட்சி.

**இடம் : ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணை, வட்டக்கச்சி.**

**காலம் : 01.09.2004 தொடக்கம் ~ 04.09.2004 வரை**

(ச - 2804)

**ஆர்வலர்களே !**

- தங்கள் சந்தேகங்களை தீர்ப்பதற்கும்,
- மேலதிக விவசாய அறிவினைப் பெறுவதற்கும்,
- சிறந்த தொழில்நுட்ப முறைகளைக் கண்டறிவதற்கும், செய்கை முறையிலும், ஒளிப்பட, புகைப்படக் காட்சியுடனும், திட்ட விளக்கவுரைகளுடனும் நடைபெறவுள்ளது.

ஆர்வம் உள்ளவர்கள், சிறந்த உற்பத்தியாளர்கள் தங்களிடம் உள்ள விவசாய, கால்நடை உற்பத்திகளை காட்சிக்கு வைப்பதற்கும், விற்பதற்கும் நாடுங்கள்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
வட்டக்கச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நாட்டைப் பிளவுபடுத்தும் எந்தவொரு யோசனைகளுக்கும் ஜே.வி.பி ஆதரவு வழங்காதாம்!

## பிரதியமைச்சர் அனுர குமார

(கொழும்பு)

வடக்கு - கிழக்கைப் பிரித்து நிர்வாகம் நடத்துவதானால் கொழும்பிலுள்ள தமிழரின் நிலை என்னவாகும் என்பதை எவரும் எண்ணிப் பார்க்கவில்லை என, விவசாய அமைச்சர் அனுர குமார திஸநாயக்க தெரிவித்தார்.

சம்மாந்துறையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

நாடு பிளவுபட்டால் மக்கள் மத்தியில் பாரிய பிரச்சினைகள் ஏற்படும்.

எதிர்காலத்தில் மிகவும் புத்தி சாதுரியமாகச் செயற்படவேண்டிய நிலைக்கு இலங்கை மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். வடக்கு - கிழக்கைப் பிரித்து நிர்வாகமொன்று நடைபெறுமானால் கொழும்பில் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி முதலான பகுதிகளில் வாழும் தமிழரின் நிலை என்னவாகும் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அண்மையில் வெளியிட்ட கருத்தில் - தான் இடைக்கால நிர்வாகத்தை ஆதரிப்பதாகத் தெரிவித்திருக்கிறார். இடைக்கால நிர்வாகத்தை ஆதரிப்பதனால் நாட்டின் ஏனைய பகுதிகளில் வசிக்கும் முஸ்லிம்களின் நிலையை அவர் எண்ணிப்பார்க்கவில்லை.

இதனால் எமது கட்சி நாடு பிளவுபடக்கூடிய வகையிலான எந்தவொரு தீர்வுயோசனையையும் ஆதரிக்காது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



மடு அன்னையின் வருடாந்தப் பெருவிழா நேற்று நடைபெற்றவேளை அதில் கலந்துகொண்ட பக்தர்களையும், உள்ளே மடு அன்னையின் திருச்சொருப பவனியையும் காணலாம்.

## ஒலிம்பிக் பதக்க விபரம்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | [illegible] | 1 | 1 | 7 |
| அவுஸ்ரேலியா | 4 | 1 | 3 | 8 |
| ஜப்பான் | 4 | 1 | 0 | 5 |
| இத்தாலி | 2 | 1 | 0 | 3 |
| உக்ரெய்ன் | 2 | 0 | 1 | 3 |
| அமெரிக்கா | 1 | 4 | 1 | 6 |
| ரஷ்யா | 1 | 3 | 2 | 6 |
| ஹங்கேரி | 1 | 1 | 1 | 3 |
| தாய்லாந்து | 1 | 0 | 1 | 2 |
| துருக்கி | 1 | 0 | 0 | 1 |
| பிரான்ஸ் | 0 | 2 | 2 | 4 |
| ஜேர்மன் | 0 | 1 | 1 | 2 |
| பிரிட்டன் | 0 | 1 | 0 | 1 |
| ஜோர்ஜியா | 0 | 1 | 0 | 1 |
| இந்தோனேசியா | 0 | 1 | 0 | 1 |
| போலந்து | 0 | 1 | 0 | 1 |
| போர்த்துக்கல் | 0 | 1 | 0 | 1 |
| சேர்பியா | 0 | 1 | 0 | 1 |
| ஸ்லோவாக்கியா | 0 | 1 | 0 | 1 |
| பெல்ஜியம் | 0 | 0 | 2 | 2 |
| பல்கேரியா | 0 | 0 | 2 | 2 |
| கியூபா | 0 | 0 | 2 | 2 |
| நெதர்லாந்து | 0 | 0 | 2 | 2 |
| ஆர்ஜென்ரீனா | 0 | 0 | 1 | 1 |
| கொலம்பியா | 0 | 0 | 1 | 1 |
| செக் குடியரசு | 0 | 0 | 1 | 1 |
| தென் கொரியா | 0 | 0 | 1 | 1 |
| மொங்கோலியா | 0 | 0 | 1 | 1 |

## வடக்கு - கிழக்கு...

அவர் அங்கு தொடர்ந்து மேலும் தெரிவிக்கையில் - இந்தியாவின் பிரபல கவிஞரான சுப்பிரமணிய பாரதியார் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாலம் அமைப்போம் என்று கூறியுள்ளார்.

எனினும் தற்போது அந்நிலையானது பாலம் அமைக்கப்படாமலேயே மக்களின் உறவுகள் மூலமாக இணைந்துள்ளது

இரு நாடுகளுக்கும் பொதுவான பல்வேறு பிரச்சினை களைத் தீர்ப்பதற்கு இரு நாடுகளும் பொதுவான கொள்கை ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்

## நாடாளுமன்ற...

சின் காலத்தின் போது முன்மொழியப்பட்ட இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவோம் என்ற திட்டத்தில் காணப்படும் நன்மைகளும் இந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தினை தவிர்ப்பதால் இலங்கையின் பொருளாதாரத்தை மீள அமைக்கக்கூடிய திட்டம் எதுவென்றும் தனது கடிதத்தில் உலகவங்கி கேள்வியெழுப்பியுள்ளது.

## வட - கிழக்கு பட்டதாரி...

அவர் மேலும் தகவல் வெளியிடுகையில் -

வேலையற்ற பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் இந்த வாரம் அனுப்பிவைக்கப்பட்டன.

வேலையற்ற பட்டதாரிகளின் பெயர்கள் கணினி மயப்படுத்தப்பட்டு முதற்தொகுதிப் பட்டதாரிகளின பெயர்கள் கடந்த மாத இறுதியில் வெளியிடப்பட்டன.

இதனடிப்படையில் 17 ஆயிரம் பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்களே இந்த வாரம் அனுப்பிவைக்கப்பட்டன.

இவர்களுக்கான பயிற்சிகள் அடுத்த மாதம் முதல் வாரத்திலிருந்து ஆரம்பமாகும். இதற்காக நாடெங்கும் 214 நிலையங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

அடுத்த தொகுதி பட்டதாரிகளின் பெயர்கள் இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக வெளியிடப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மடு பெருநாள் உற்சவ...

மடுப்பெருவிழாவின் ஆராதனைகளை இரத்தினபுரி மாவட்ட ஆயர் வண மல்கம் ரஞ்சித், யாழ். மறை மாவட்ட ஆயர் வண.தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார், மன்னார் மறை மாவட்ட ஆயர் வண. இராயப்பு யோசேப் ஆகியோர் நிகழ்த்தினர்.

இங்கு ஆராதனையின் பின் உரையாற்றிய ஆயர் மல்கம் ரஞ்சித் - இந்த நாட்டில் பல வருடங்களாக இடம்பெற்ற போருக்குப் பின்னர் தற்போதுதான் ஒரு அமைதிச்சூழல் திரும்பியுள்ளது. இதுவும் தற்போது முறிவடையுமோ என மக்கள் அச்சம் கொண்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

## புலிகள் முன்வைத்த...

தெரிவித்திருந்தார்.

அமைச்சரின் இந்தக் கருத்துத் தொடர்பாகக் கூறியபோதே விமல் வீரவன்ச இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை - விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த திட்டத்தை வைத்து அரசாங்கம் ஒரு திட்டத்தை தயாரித்து அதன் அடிப்படையில் பேச்சுவார்த்தை இடம்பெறுமா என்பது குறித்து -

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கம் எந்த முடிவையும் எடுக்கவில்லை. தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளிலிருந்து அரசாங்கம் மாறவில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கம், விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை விரைவில் ஆரம்பித்து இறுதித்தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சமாதான நடவடிக்கை...

பதிலை தமிழ்மக்களும், விடுதலைப் புலிகளும் அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்த்துள்ளனர்.

எவ்வாறாயினும் சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படுவதற்கு விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபை அடிப்படையானது.

விடுதலைப் புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை முன்வைத்தது அரசியல்ரீதியானதென எவரும் தவறா நினைக்கக்கூடாது.

அவசரகால மனிதாபிமான தேவைகள், கடந்த இருபது வருடகாலப் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுதல், போர்நிறுத்த உடன்படிக்கையை முழுமையாக அமுல்படுத்தல், மீள்குடியேற்றம், அடிக்கட்டுமானம் மற்றும் புனர்வாழ்வு போன்றவற்றை ஏற்படுத்துவதற்கே எம்மால் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை முன்வைக்கப்பட்டது எனத் தெரிவித்தார்.

இவற்றைக் கேட்டறிந்து அவற்றை வரவேற்ற மதகுருவினர், விடுதலைப் புலிகளால் முன்னெடுக்கப்படும் யுத்த நிறுத்தம் மற்றும் சமாதான முயற்சிகள் தொடர்பாக உள்ள பிரச்சினைகளைத் தாம் புரிந்துள்ளதாகவும், இவற்றைத் தாம் ஜனாதிபதியின் கவனத்துக்கு எடுத்துச்செல்லவுள்ளதாகவும் உறுதியளித்தனர்.

அத்துடன், சமாதான முயற்சிகளுக்கு தமது முழுமையான ஆதரவைத் தொடர்ந்தும் வழங்குவதாகவும், அனைவருக்கும் அமைதி உண்டாகவேண்டுமென்பதே தமது விருப்பம் எனவும் தெரிவித்தனர்.

## ஐரோப்பிய...

செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இந்தக் குழுவில் இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதுவர் சுசாங் பிளாங்காட், பிரித்தானிய உயர்ஸ்தானிகர் எஸ்ரிபன் இவன்ஸ், ஐரோபிய ஒன்றியத் தூதுவர் வூ[illegible] வில்சன் ஆகியோர் இடம்பெறவு[illegible]ளனர்.

இந்தச் சந்திப்பின்போது தேக்க நிலையில் உள்ள சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக முக்கியமாகக் கலந்துரையாடப்படலாம் எனச் செய்திகள் தெரிவித்தன.

## அரசியற்துறை...

தித்துக் கலந்துரையாடிவருகின்றனர்.

நேற்று மாலை உவர்மலை, 3 ஆம் குறுக்குத் தெருப் பகுதியில் மாலை 5 மணிக்குப் பொதுமக்கள் சந்திப்புக்கு எனச் சென்ற 3 பெண் போராளிகள் உட்பட, 7 அரசியற்துறைப் போராளிகளும் அந்தப் பகுதிக்குத் திடீர் என வந்த இராணுவத்தின் மோட்டார் சைக்கிள் ரோந்துப் பிரிவால் தடுத்து நிறுத்தப்பட்டு தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டதுடன் ஏறத்தாழ ஒரு மணிநேரம் அந்த இடத்திலேயே தடுத்து வைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அறிந்த மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன், சம்பவ இடத்துக்கு விரைந்து இராணுவ ரோந்துப் படையினரிடம் தடுத்து வைப்பிற்கான காரணம் குறித்து வினவியபோது,

அரசியற்துறைப் போராளிகள் ஆயுதம் சகிதம் வந்துள்ளதாகத் தமக்குத் தகவல் கிடைத்தது என்றும், எனவேதான் இந்த விசாரணையையும், தடுத்து வைப்பையும் மேற்கொண்டதாகக் கூறினர். எனினும் இராணுவத்தினர் தெரிவித்தபடி போராளிகள் எவரும் ஆயுதங்களுடன் அங்கு இருக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

போராளிகளைத் தடுத்த இராணுவத்தினர், பெண் போராளிகள் இடுப்புப்பட்டி அணிந்துள்ளமையையும் சுட்டிக்காட்டி ஆட்சேபனை தெரிவித்தனர். எனினும், இவை அனைத்தையும் தாம் போர் நிறுத்த உடன்பாட்டின் ஒழுங்குகளுக்கு உட்பட்டே மேற்கொண்டு வருவதாகவும், எனவே இன்றைய தடுத்து வைப்பு அப்பட்டமான போர் நிறுத்த மீறல் என்றும் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் கூறினார்.

ஏறத்தாழ ஒரு மணிநேரத்தின் பின்னர் தொடர்ந்து மக்கள் சந்திப்பு நடைமுறைகளை தமது அரசியற்துறைப் போராளிகள் மேற்கொண்ட போதும், நடந்த விடயங்கள் குறித்து எழிலன், திருகோணமலை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் புகார் செய்ததுடன், இராணுவத்தினரின் சினமூட்டும் இந்த நடவடிக்கைகக்குத் தமது கண்டனத்தையும் தெரிவித்தார்.

(10)

மஹஜன சம்பத பெறுபேறுகள்
சீட்டிழுப்பு இல:- 1639 திகதி 2004.08.13
வெற்றி இலக்கங்கள்
N 8 1 6 9 0 5
அடுத்த சுப்பர் பரிசு 181 லட்சத்துக்குமேல்

இன்று முதல்
A/L - 2005
DAY CLASS
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
காலை 8.30
DMI
(2938)

JTC
யாழ். கல்வி நிலையம்
மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்
2004 தரம் 5
புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு எமது 8 ஆசிரிய குழாமின் விசேட பயிற்சியாலும், மாதிரிப் பரீட்சையாலும் 15.08.2004 நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களினதும், பெற்றோர்களினதும் மகிழ்வைப் பெற்ற எமது கல்வி நிலைய -
Super Grade ஆசிரியர் குழாமான,
திரு. N.T.S.சுபநாதன் திரு.K.மகாலிங்கம்
திரு S.சுகுமாரன் செல்வி M.ரஞ்சினி
திரு.S.திலகநாதன் திரு.S.குகன்
திரு.E.ஜெசிந்தன்
சிங்களம் திரு.S.லீலாக்கிருஸ்ணன்
இவர்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.
2005 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதிப் பரீட்சை 05.09.2004 ஞாயிற்றுக்கிழமை 10Am மணிக்கு நடைபெறும்.
☆ இன்றுமுதல் பரீட்சைக்குரிய பெயர்கள் பதிவுசெய்யப்படும்
☆ மாதத்தில் 60 மணித்தியாலம் வகுப்புக்கள் நடைபெறும் மாதாந்தக் கட்டணம் 150/-
☆ ஒவ்வொரு ஞாயிறும் 10 am மணிக்கு மாதிரிப் பரீட்சை நடைபெறும். (வெளி மாணவர்களும் தோற்றலாம்)
☆ இம்முறை 2 பிரிவுக்கு மட்டுமே வகுப்புக்கள் நடைபெறும்.
(907)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.